முரசொலி

வார இதழ்.

ஆசிரியர் மு. கருணாநிதி.

2 அணா

முரசு 2 | சென்னை | 23—12—55 | வெள்ளி | ஒலி 39

பாதிக்கப் பட்டோர் சார்பாக!

தென்றலின் தண்மையை நுகரும் தென்னகம், புயலெனும் தேளால் கொட்டப்பட்டு, தேம்பியழும் வேதனை நிலைமை, திரும்ப மூன்றாண்டுகளுக்குள் ஏற்பட்டுவிடும் என்று யாரும் எண்ணத்தானில்லை.

கடவுள் பக்தி குறைந்துவிட்ட காரணத்தால் வெள்ளமும்; புயலும் வீசி வேதனைத் தீயை வளர்த்துவிட்டதாகப் பக்தர்கள் கூறுகிறார்கள். உயிர் பிழைத்தவர்கள் எல்லாம் கடவுள் அருளால் தப்பி விட்டார்கள் என்று ஏடுகள், செய்தி மேகங்களைக் குவிக்கின்றன. தப்பிப் பிழைத்தவர்கள் எல்லாம் கடவுளின் கருணையைப் பாராட்டுகிறார்கள். செத்தவர்கள் ஆயிரவரும் கடவுளைத் திட்டவில்லை. காரணம்; அவர்கள் செத்து விட்டார்கள்! கோடிக்கரையிலேயிருந்த ராமர்பாத மண்டபத்திலேயிருந்து இன்னும் பல கடவுள்களின் கோயில்கள் வரையிலே புயலின் கோரக் கரங்களிலே சிக்கிப் பொலிவிழந்து கிடக்கின்றன. கடவுளை நினைத்துக் கடலிலே இறங்கும் மீனவர் குடிசைகள் இருந்த இடம் தெரியவில்லை. இகத்தில் இல்லையென்னும் பரத்திலே இன்ப வாழ்வு தருவான் இறைவன்—என எண்ணிக் கலப்பை ஏந்திக் கழனி செல்லும் உழவர் பெருமக்கள் பல்லோர், குந்திய வீடிழந்து, முந்திய நிலையிழந்து கஞ்சி வார்த்திடும் பந்தியிலே கையேந்தி நிற்கின்றனர். அறிவியக்கக் கொள்கைகள் அதிகமாகப் பரவாத வேதாரண்யம் பகுதிகளிலே—வேதடரீஸ்வரர் கோயில் கொண்டிருக்கும் க்ஷேத்திரத்தின் ஓரத்திலேதான் சேதம் அதிகம்; வேதமும், ராமர் பாதமும் உள்ள இடம் அது!

★

சோகம் பெருக்கெடுக்கும் இந்த நேரத்திலே, சூழ்நிலையை விஷமாக்கி, சுயமரியாதை இயக்கத்தின்மீது கணை விடுக்கும் சுதேசமித்திரன் போன்ற ஏடுகளுக்குத் தரவேண்டிய பதிலாகி விட்டது, மேலே தந்துள்ள செய்திகள்!

சுதேசமித்திரன் வார ஏடு, தனது வழக்கமான குலாச்சாரப் பண்பின்படி புயலை அஸ்திவாரமாக அமைத்து நம்மைத் தாக்கும் அரணை அமைக்க முற்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் மகாசபை புயல் நிதிக்கு பத்தாயிரம் தந்ததாம்; தி. மு. கழகம் ஆயிரந்தான் தந்ததாம்-கேலி புரிகிறது அந்த வேலியோரத்து ஓணான்!

போன தடவை புயல் வீசியபோது, நாம் மடிப்பிச்சை எடுத்து, முப்பதாயிரம் ரூபாய் திரட்டித் தந்தபோது, காங்கிரஸ் மகாசபையின் தற்போதைய தீவிரம் எங்கு போய் ஒளிந்து கொண்டதாம்! இம்முறையும் தி. மு. கழகம் வாளாயிருந்து வேடிக்கை பார்க்கவில்லையே! தலைமை நிலையம் ஆயிரம் தந்தது கிளைக் கழகங்கள் இதுவரை பணமாகவும், பழைய, புதிய துணிகளாகவும்—மொத்தம் இருபதாயிரம் ரூபாய் வரை புயல் நிவாரணத்தற்கு அனுப்பியிருக்கிறது. இன்னும் அனுப்பி வருகிறது.

சென்னை மாவட்டத்திலே மட்டும் மாவட்ட தி. மு. கழகம், ஆயிரத்து ஐநூறு ரூபாயையும், பதினைந்தாயிரம் உடைகளையும் இதுவரை திரட்டியிருக்கிறது. திருச்சி மாவட்டம் உணவுப் பண்டங்களையும் உடைகளையும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பியிருக்கிறது. பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்கள் பால் சென்று ஆறுதல் கூறி ஆவன செய்ய உறுதியளித்து திரும்பியிருக்கிறார். அவரிடம் தரப்பட்ட செய்திதான், சென்ற தடவை புயல் நிவாரணத்திற்காக சர்க்கார் மூலமாக நாம் அனுப்பிய துணிகள் இன்னும் விநியோகிக்கப் படாமல் கிடக்கின்றன என்பது!

அந்தக் கொடுஞ்செய்தி கேட்ட பிறகுதான், பொது ஸ்தாபனங்களை நம்பவேண்டாமென அறிக்கைவிடும் அரசியலாரின் போக்கு எவ்வளவு விநோதமாயிருக்கிறதென வியந்து, திருச்சி நிதிக் கூட்டத்திலே வசூலான தொகைக்கு கைத்தறி துணிகள் வாங்கி, ஐநூறுக்கு மேற்பட்ட மக்களுக்கு நேரடியாகவே வழங்க நேர்ந்தது.

ஆறு மாதங்களுக்கு முன்பே துவங்கப்பட்ட மாநில மாநாட்டு நிதி வசூலையும், புயல் நிவாரணத்தையும் ஒப்பிட்டுக் காட்டும் மித்திரனின் இழிதகை எண்ணம், நாம் நமது மாநில மாநாட்டை ஏப்ரலுக்கு ஒத்திவைத்திருக்கிறோம் என்ற செய்தி கேட்டாவது மாறுமோ? மாறாதோ?

வடக்கே இருந்து பெருந்தொகை வந்து விட்டதாம், காங்கிரஸ் மந்திரிகளும் கவலை அதிகம் காட்டுகிறார்களாம்—அதனால் நம்மைக் காரசாரமாகத் தாக்க வேண்டுமாம். இந்த அற்ப ஆசைக்கு அடிமையாகிவிட்ட மித்திரனின் பண்பை என்னென்பது?

சென்ற புயலின்போது மலையாளத்து உப்பங்கழிகளிலே, பண்டிதர் படகு விட்டுக்கொண்டு, மானையும், மாடப்புறாக்களையும் ரசித்துக் கொண்டிருந்தார் என்பதை தமிழகம் மறந்து விடவில்லை.

இப்போதுமட்டும் காங்கிரஸ் ஆளவந்தாருக்குத் தாராளம் பிறந்திருக்கிறது. நமக்கு ஏராள மகிழ்ச்சிதான்!

மகிழ்ச்சிப் பெருக்கில் ஒன்றை மறந்துவிட மாட்டோம்.

போனதடவை, பொதுத் தேர்தல் முடிந்து, மந்திரிசபைகள் அமைந்த பிறகு புயல் வந்தது. அதனால் ஏங்கிய தமிழருக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கவில்லை. இந்த முறையோ, வந்த புயல் நல்லவேளையாக பொதுத் தேர்தலுக்கு முன்பே வந்துவிட்டது. அதுவரையில் மக்களுக்கு நஷ்டத்தினிடையே சிறிது லாபந்தான்!

இதை, மக்கள் உணர்ந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

மித்திரன் வேண்டுமானால் சித்திரஜாலம் செய்யலாம்.

அரசாங்கம் அபரிமிதமான அக்கறை காட்டுகிறது என்று வர்ணிக்கப்படுகிறதே தவிர, நேரில் காணும்போது, ஏடுகளில் வருகிற அளவுக்கு நிவாரண வேலைகள் துரிதமாக நடைபெறுகிறது என்று கூறுவதற்கில்லை.

இதை மித்திரனுக்கு மட்டுமல்லாமல்-நிவாரண வேலையில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கத்தாருக்கும் எடுத்துக்காட்ட வேண்டிய நிலையிலிருக்கிறோம். அவதிப்படும் மக்களை சொக்கட்டான் காயாக அமைத்துக் கொண்டு சுயலாப வேட்டைகளில் ஈடுபடும் பிரமுகர்களும்—சுதேசமித்திரன் பண்பினரும் தங்களுக்கு இடம் தேடிக் கொள்ள வேண்டாமென கடுமையாகவே எச்சரிக்கிறோம், பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக!

★

Best copy available

மௌடீகபுரியின் காவலரே!

"இந்து சமுதாயத்தின் தொன்மையையும் பண்பாட்டின் பெருமையையும் மக்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும். இந்து மக்களை மீண்டும் ஒன்றுபடச் செய்ய வேண்டும். ஒரே சமுதாயத்தினர் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். காஷ்மீரத்திலிருந்து கன்யா குமரிவரை 'இந்துக்கள்' என்றஎண்ணம் பரவவேண்டும் நாட்டின் எந்த மூலையில் வசித்தாலும் இந்துக்களின் பண்பாடு ஒன்றே; நாமனைவரும் இந்துக்கள் என்பதை மறக்கக்கூடாது மொழிவேற்றுமைகள் அதிகரித்துவிட்டன. இவைகள் சமுதாயத்தை துண்டுதுண்டாக பிரித்துவிடும்"

இப்படி செத்துப் போன பிரச்சனைகளை 'செக்குமாட்டு' சுபாவம் கொண்ட கோல்வால்கர் பரிதாபகரமான குரலிலே பேசி இருக்கிறார்.

வெறி கொண்ட புலி ரத்த நாக்கை சுழற்றிக் கொண்டு அலைவதைப் போல-நித்தம் குண லட்சணங்களையும் (!) தன்னகத்தே கொண்ட வகுப்புவாத சங்கத்தின்—பாதுகாவலராம் கோல்வால்கர்;

இத்தகைய மதவெறியர்களைப் பற்றியும்—அவர்கள் மக்களுக்கு இழைத்திட்ட கொடுமையைக் குறித்தும் — புதிய ரஷ்யாவின் புரட்சி சரித்திரத்தை எழுதிய அறிஞன் ஒருவன் "சதைக் கொழுப்பேறிய ஜார்-ரஷிய மக்களுக்கு இழைத்த கொடுமைகளைவிட, சமயவெறி கொண்டலைந்த பூசாரிக் கூட்டத்தினரும் மதத் தலைவர்களும் தான் பாமர மக்களை கொள்ளையடித்து வாழ்ந்தனர் என்றும் உடைமைகளைக் கொடுத்து—உரிமைகளை இழந்து வாழ்ந்த உழைக்கும் வர்க்கத்தினர், புதுமை எழுத்தாளர்கள் தந்த விளக்கங்களால் எத்தர்களின் முகாம் நோக்கி 'ஏன்' என்ற அந்த வினாவினை எழுப்பியபோது — மதச்சருக்களும்-மார்க போதகர்களும் தான் அந்த புரட்சியாளர்களின் எழுச்சிக்கும் அவர்கள் இதயங்களிலே எழுந்த சூறாவளிக்கும் அணை போட முயன்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாமர மக்கள் தங்களை மூடியுள்ள அறியாமைத் திரையை கிழித்தவிட்டு புதுமைக் கருத்துக்களை வரவேற்றபோது தங்கள் சுகபோக வாழ்விற்கு வெடி வைக்கப்படுகிறதே என்று புழுங்கிச் சாகின்ற அந்த 'மதப்பித்தர்களின்' சகாப்தத்திற்கு ரஷ்ய மண்ணிலே முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது. ஆனால் இங்கோ,

கோல்வால்கர் வடிவங்களில் இன்னும் சிலர்—ஆமாம், விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலர்—முணுமுணுத்தபடி மதச் சாக்கடையிலே நெளிந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

மக்களுக்கு நன்மார்க்கத்தை மோதிக்க வேண்டிய மதக் காவலர்கள் — துன்மார்க்கத்தை வளர்த்துவிடும், பலாத்கார செயல்களில் ஈடுபடுவதையும்,

அன்பையும் அறத்தையும் கற்றுத்தர வேண்டிய சிலர்கள், ஆணவத்தையும் — அண்ணல் காந்தியாரின் ஆவியைக் குடிக்கின்ற அளவிற்கு அராஜகத்தையும் வளர்த்துவிடுகின்ற வெறிச் செயல்களில் முனைந்துவிட்ட தையும்-நாம் ஆயிரம் ஆயிரம், மேடைகளிலும், ஏடுகளிலும் விளக்கி இருக்கிறோம்.

நெஞ்சிலே தூய்மையை வளர்க்க வேண்டிய மடாதிபதிகள்—தோட்டங்களிலே கஞ்சாச் செடியை வளர்க்கின்ற அளவிற்கு மனித நிலையிலிருந்து இறங்கிவிட்டார்கள் என்பதை நாம் கூறித்தான் நாடு தெரிந்து கொள்ள வேண்டும் என்றநிலை கடந்துவிட்டது.

'மதம்' என்றாலே முகத்தை சுளித்துக் கொள்ளுகின்ற அளவிற்கு மக்கள் தெளிவடைந்துவிட்டார்கள் 'இந்துமதம்' என்றாலே இழிவு மதம் இறந்து போன மதம், என்று கூறிடும் மாணவர் உலகத்தை இன்று நம்மால் காணமுடிகிறது.

★

இந்த நிலையில்தான் எழும்பூரில் நின்றுகொண்டு 'ஏக இந்தியா'விற்கு அறைகூவல் விட்டிருக்கிறார் 'இந்து மதத்தைக் காக்க எழுவீர்' என்று!

இந்து மதத்தின் தொன்மையையும்—பண்பாட்டின் பெருமையையும் மக்கள் உணர வேண்டுமாம், குறிப்பிட்டிருக்கிறார் கோல்வால்கர். எது இந்து மதப் பண்பாடு? இழிவு நிறைந்த இராம காதை கற்றுக் கொடுக்கும் கோழைக் கொள்கையா? பாரதம் பறைசாற்றும் 'அந்த' பொதுவுமைத் தத்துவமா? எந்த பண்பாட்டினை தோழர் இந்து மதப் பண்பாடு என்று குறிப்பிடுகிறாரோ நமக்குத் தெரியவில்லை. இராம காதையும் பாரதமும் கற்றுக்கொடுக்கும் ஆரிய நாட்டினரின் அந்த பண்பாட்டினை ஒப்புக் கொண்டு-அதன் வழி நடப்பவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை;

ஆனால் நம் பண்பாடு வேறு-அந்தபண்பாடு ஆரிய பண்பாட்டினின்றும்—வேறுபட்டது—முற்றிலும் முரணானது. முத்துச் சந்தைக்கு சொந்தக்காரனும் பாண்டியன் கற்றுக் கொடுத்தது' அதுதான் உலகத்தின் தலைசிறந்த பண்பாடாம் திராவிடர் பண்பாடு! என்பதை சரித்திரத்தின் ஒவ்வொரு அத்தியாயமும் இடிக்குரல் எழுப்பிச் சொல்கிறது.

★

மக்களை கண்மூடிகளாக்கி—அவர்களின் ஏமாற்றத்தை அஸ்திவாரமாகக் கொண்டு வகுப்பு வெறியையும்—சமயச் சண்டைகளையும் வளர்த்துவிட்டு, 'சுகமாளிகை' அமைத்து சுரண்டிவாழும் இந்துமதக் காவலர்களின் இந்த ஆசை, கேலிக்குரியதும் — பயித்தியக்காரத்தனம் நிறைந்ததும் செயல்படுத்த முடியாத ஒரு வீண் முயற்சி என்பதையும் சரித்திரத் தொடர்பு கொண்டோர்—மதத்தால் ஏற்பட்ட கொடுமைகளை உணர்ந்தோர்: தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

வேள்விச் சாலைகளில் வளர்ந்த விஷநெஞ்சினர் இந்த நாட்டிலே விதைத்துவிட்ட கேடுகள்; கொடுமைகள்; கண்யக் குறைவான செயல்கள், அறிவுடையோர் சொல்லக் கூசும் ஆபாசங்கள் அத்தனையும், 'இந்து மதம்' என்ற பெயரால் நடைபெற்றவைகளே என்பதை சராசரி அறிவுடையோர்கூட தெரிந்து கொண்டிருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் கோல்வால்கர் தோற்றத்திலே 'ஆரிய பண்பாட்டிற்கு' உயிர் பிச்சை கேட்கப் புறப்பட்டிருக்கின்றனர் மத வெறியர்கள்.

மனம் தெளிவீர்; மதி பெறுவீர்!

நித்தம் செத்துக் கொண்டிருக்கும் இந்து மதத்தைக் காப்பாற்றும் நோக்கோடு 'மதவெறி' பிடித்தலையும் சனாதனக் கூட்டத்தைச் சேர்ந்த தோழர் 'அபயக்குரல்' எழுப்பி இருக்கிறார் எழும்பூர் கூட்டமொன்றில்!

ஒரு 'டஜன்' மக்களை முன்னிறுத்தி அவர் ஆற்றிய 'மகத்தான' அந்த சொற்பொழிவைக் குறித்துகலக்கம் ஏற்படவில்லை நமக்கு. மாறாக- இப்படிப்பட்ட ரகங்கள் இன்னும் உலவிக் கொண்டிருக்கின்றனவே' என்ற கவலைதான் நம்மை சிந்திக்க வைக்கிறது.

இந்து மதத்தைப்பற்றி சத்தமிட்டுப் பேசுவதே வெட்கக்கேடான செயல் என்று அறிஞர்கள் கருதுகின்ற இந்த இருபதாம் நூற்றாண்டில் இந்து மதத்தின் சீரும்—சிறப்பையும் அது இன்று சீரழிந்த இழவுச் செய்தியையும் 'அழுகுரலில்' எடுத்துக் கூறி—ஆகவே 'அனைவரும் வாரீர் அழிந்து கொண்டிருக்கும் ஆரிய மதத்தைக் கட்டிக் காப்போம்—வர்ணாஸ்ரம நீரூற்றி மீண்டும் உயிர் பெறச் செய்வோம்'—என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். வீரம்—விவேகம் இரண்டும் தவிர மற்றெல்லா

★

சரித்திரத்தின் எந்த மூலையிலும் இமயத்திலிருந்து குமரி வரை ஒரே பண்பாடு இருந்ததற்கு சான்றே கிடையாது! ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட, முரணான பல்வேறுபட்ட பண்பாடு கொண்ட மக்கள்தான் இந்திய உபகண்டத்திலே இருந்தனர்—இருந்து வருகின்றனர்;

என்றாலும் இந்துமத வெறியர்கள். எதற்கெடுத்தாலும் ஏக இந்தியா, இந்தியப் பண்பாடு-என்று பேசி ஒரே இந்திய ஏகாதிபத்தியத்தை திணிக்கின்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெடித்துச் சிதறிய மங்கோலிய எரிமலையாம் செங்கிஸ்கான்—இந்திய உபகண்டத்தின் இதயத்தையே பிடித்துக் உலுக்கினான்! தடை உடைத்த வெள்ளம்போல் பாய்ந்தான் தைமூர்! சிங்க முழக்கம் எழுப்பினான் பாபர்! சீறும் புலியென பனிப்பாறைகளைத் தாண்டி வந்தான் அலெக்சாண்டர்! கலிங்கத்து மண்ணிலே ரத்தக்கறை பூசினான் அசோகன்! அப்பொழு

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 23—12—55 வெள்ளி

களிப்பூட்டும் காபூல் செய்தி !

"இந்தியாவிலே பலமொழிகள் பேசப்படலாம்; ஆனால் இந்தியா ஒரேநாடுதான்!"

இந்தியாவிலே பல்வேறு தேசிய இனங்கள் இருக்கலாம்; ஆனால் இந்தியா ஒரே நாடுதான்!"

—இப்படித்தான் வாதிடுகின்றனர் திராவிட நாட்டுக் கோரிக்கையின் எதிரிகள்!

விந்தியம் தாண்டி வடவர் பட்டாளம் தென்னகம் புகுந்ததில்லையே; மலைமலையாய்த் திரண்டிருக்கும் அவர்கள் திரவியம் திருடர்பால் சேர்ந்ததில்லையே; தித்திக்கும் அவர்கள் மொழியோடு மாற்று மொழியால் தினையளவு கலக்கத்தான் முடிந்ததே தவிர ஒருக்காலும் கவிழ்க்க முடியவில்லையே; அவர்கள் கலை தனியாயிற்றே; கலாச்சாரமும் தனியாயிற்றே!"—என்று எக்காளம் ஊதிடும் சரித்திரச் சான்றுகளின் முன்னிலையில் கூட அவர்கள் கோணல் வாதப்படி கொக்கரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

தேசியக் கூடாரம் ஓரளவு நம் கொள்கைபற்றி தெளிவு பெற்று வரும் நேரத்திலேதான் செங்கொடித் தோழர்கள் நம்மீது சீறிப் பாய்கின்றனர்: ஏக பாரதம் பற்றி என்றுமில்லா அக்கரையுடன் நம்மீது ஏசல் கணைகளைப் பூட்டுகின்றனர்.

இந்தியா ஒன்றெனும் நொண்டிப் பேச்சினை நிலைநாட்ட இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இழிநிலைக்குத் தள்ளப்பட்ட தமிழகத்தின் நிலைகுறித்து அவர்களோ தங்கள் ஜனசக்தி வீட்டுக் கதவுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டனர்!

தேவிகுளம்; பீர்மேடு குறித்து சட்டசபையிலே அரிவாள்; சுத்தியல் கொடி கொண்டோர் ஆமையைப் போல் அடங்கினர். இன்று அவர்கள் எழுந்து நிற்க முடியாத அளவுக்கு 'ஏக இந்தியா' அவர்கள் முதுகெலும்பை வளைத்துவிட்டது.

திராவிடம் பிரிந்தால் தனித்து வாழுமா—என்று கேட்டு தெளிவு பெறுவதைவிட, இந்தியாவைப் பிரிக்காதே — என்பதிலேதான் அவர்கள் வாதாடும் திறனை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் புல்கானினுடைய ஆசிய விஜயமோ இந்தக் கொள்கையிலும் மாபெரும் பிளவொன்றை ஏற்படுத்திச் சென்றிருக்கிறது.

டிசம்பர் 17-ம் தேதியன்று ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் நடைபெற்ற விருந்தின்போது ரஷ்யப் பிரதமர் சற்றும் ஒளிவு மறைவின்றி தனி உரிமை கோரும் பக்டுனிஸ்தானுக்கு நேரடி ஆதரவு தந்திருக்கிறார்.

பக்டுனிஸ்தான் பிரச்னை நம் தோழர்களுக்கு நன்றாக நினைவிருக்கும். நம்முடைய பிரிவினைப் போராட்டத்துக்காக நாம் பலமுறை எடுத்து உபயோகித்த உதாரணம்தான் பக்டுனிஸ்தான்!

நிலப் பரப்பில்; மக்கட் தொகையில்; பொருள் வளத்தில் நாம் கேட்கும் திராவிடத்தைவிட மிகக் குறைந்தது!

காபூலிலே பேசிய புல்கானின் பக்டுனிஸ்தான் கோரிக்கைக்கு கைலாகு கொடுத்திருக்கிறார்!

பாகிஸ்தானுடைய ஆதிக்கத்திலிருக்கும் வடமேற்கு எல்லை மாகாணத்துக்கு அடுத்தாற் போலுள்ள மலைஜாதிப் பிரதேசத்தில் விடுதலைப் புயல் புகுந்துவிட்டது. அங்கு வாழும் பட்டாணியர்கள் தங்களுக்கென பக்டுனிஸ்தான்—என்னும் தனிநாடு கேட்டுத் தணலாய் மாறிவிட்டனர்!

இந்த கோரிக்கைக்கு இதே இனத்தைக் கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தான் உறவினர் என்ற முறையில் பக்டுனிஸ்தான் முழக்கத்திற்கு முழு ஆதரவும் தந்து உதவுகிறது!

இதுவரை வல்லரசு நாடுகள் எதுவும் பக்டுனிஸ்தான்பற்றி வாய்திறக்கவில்லை. மதில்மேல் பூனை போலிருந்த இந்த நிலையைக் கலைத்து புல்கானின் 'பக்டுன்' பிரச்சனையைப் புதிய கட்டத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்!

ஏக பாகிஸ்தானை இரண்டுபடுத்த ரஷ்யா ஆதரவு தருகிறது!

தக்க காரணங்களிருந்தால்—சரிதத்தின் அணைப்பிருந்தால்; தனி உரிமைக் கனல் தடை மீறிச் சுடர் விட்டால், ஒரு நாட்டைப்பிரிப்பது தவறல்ல—என்று கம்யூனிஸ்ட்களின் தலைமை பீடம் பாடம் புகட்டியிருக்கிறது!

புல்கானின்—குருஷேவ் வரவு காரணமாகக் குடைசாய்ந்து போயிருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் காபூல் செய்தியை மீண்டுமொரு தடவை கருத்தூன்றிக் கவனிக்கட்டும் !

பாக்கிஸ்தானைப் பிரிக்க வேண்டுமென்று கூறும் ரஷ்யத் தலைமைப்பீடம் இந்திய உபகண்டத்தைப் பிரிப்பதற்கு மட்டும் தடை சொல்லிவிடுமா?

பக்டுனிஸ்தானுக்கு இரு கை விரித்து ஒருமுகமான ஆதரவு நல்கியிருக்கும் புல்கானின் 'திராவிடஸ்தான்' பிரிவதை மட்டும் திருநீலகண்டமென்று தள்ளியா விடுவார்?

மாஸ்கோ நோக்கிகளே! கண்ஜாடை காட்டிவிட்டார் கிரெம்லின் வாசி! உதட்டசைவு தந்துவிட்டார் உங்கள் எதிர்காலம் ஏற்றம் பெறுவதற்காக! உடன் உங்கள் நண்பர்களைக் கூட்டி நல்லதோர் முடிவு செய்யுங்கள்.

பக்டுனிஸ்தான் எந்தெந்தக் காரணங்களுக்காக பிரிய வேண்டுமெனக் கூறுகிறதோ, அதைவிட பலமடங்கு அதிகமான—பசுமரத்து ஆணிக்கு நிகரான—காரணங்கள் திராவிடஸ்தான் பிரிவினைக்கும் இருக்கின்றன!

பட்டாணியர்களைவிட திராவிடர்கள் ஆட்சித் திறனில் குறைந்தவர்கள் அல்ல !

—எனவே துணிந்து முடிவெடுங்கள்!

இனி நீங்கள் வகுக்கப் போகும் கொள்கையிலிருந்தும், அதிலிருந்து பிறக்கப் போகும் 'திராவிட நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி'யிலிருந்தும்தான் தென்னகத்தோர் உங்கள் எதிர்காலத்தை முன்மொழியப் போகிறார்கள்!

★

★ ★

புயலால் பாதிக்கப்பட்டோர்
நம் சோதரர்கள் !

அவர்களுக்கு

உங்கள் உதவியை

அளித்து விட்டீர்களா ?

★ ★

வலை வீசவில்லை!

தென்பகுதி ரயில்வேமென் யூனியன் நிதிக்காக 18-12-55 மாலை 6 மணியளவில் சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில்—ரயில்வே தொழிலாளர் நிதிக்காக ரு. 100-0-0 அன்பளிப்பாக தந்து—மு. கருணாநிதி நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்பட்டிருக்கிறது.

''தொழிலாளர்களுக்கு வயிறு மட்டுமே இருப்பதாக சொல்லுகின்றனர் கம்யூனிஸ்டு கட்சியினர்; வயிரோடு ஒட்டுப் போடுவதற்கு கையும் இருக்கிறது என்கின்றனர் காங்கிரஸ்காரர்கள்; வயிறும் இருக்கிறது, கையும் இருக்கிறது; அதோடு 'இதயம்' என்ற ஒன்றும் இருக்கிறது; அது இருண்டு போகக் கூடாது என்று கருதுகிறது திராவிட முன்னேற்ற கழகம்

தென்றல் தவழும் சோலையில் தேனினுமினிய கீதம் இசைக்கும் காதலியைத் தழுவிட ஓடும் காதலனைப் போல அல்லாமல்—வேதனைப் புயலால் தாக்குண்ட வேதாரண்யம் பகுதியிலே நுழைவது போலவே, தொழிலாளர் மத்தியிலே தோழமை உணர்ச்சியோடு தி. மு. கழகம் நுழைகிறது.

தென்பகுதி ரயில்வே கழகத்தினர் என்னை அழைத்ததும் நான் ஒப்புக் கொண்டதற்கு காரணம்—அவர்கள் தங்கள் கழகத்திற்கு முன் 'தென்' என்ற ஒரு வார்த்தையை இணைத்திருக்கிறார்களே— அது எனக்கு 'தேன்' போல் இனிக்கிறது! எனவேதான் அவர்கள் அழைத்ததும் இங்கு வந்தேன்.

தென்னகத்திலுள்ள சில அரசியல் கட்சிகள் தங்கள் வளர்ச்சிக்கு தொழிலாளர்களின் சக்தியை பயன்படுத்திக் கொண்டன, திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிப் பட்டதல்ல—என்று எனக்கு முன் பேசிய தோழர் குறிப்பிட்டார்.

ஆமாம், தொழிலாளர் சங்கத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகம் வலை வீசவில்லை மாறாக தொழிலாளர்கள்தான் தி. மு கழகத்தின்பால் நேசக் கரம் நீட்டியிருக்கிறார்கள்.

தொழிற் சங்கங்களுடன் கழகம் தொடர்பு கொள்வது புதியதொரு சம்பவம் அல்ல; இயக்கம் அரும்பிய காலத்திலிருந்தே தொழிலாளர்களுடன் தொடர்புகொண்டிருக்கிறது ரயில்வே தொழிலாளர்களுக்கென்று முதன் முதலாக ஒரு தொழிற் சங்கம் அமைந்தது 1918-ம் ஆண்டில்தான் என்று நினைக்கிறேன். அந்த சங்கம் நாகையில் துவங்கப்பட்டது. பிறகு 1928-ம் ஆண்டில்தான் முதல் போராட்டத்தில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

அப்பொழுது தொழிற் சங்கங்களை இயக்கிவந்த மா. சிங்காரவேலர், முகுந்தலால் சர்க்கார், கிருஷ்ணசாமி பிள்ளை, எஸ் வி. லிங்கம், போன்றவர்கள் அப்போராட்டத்தில் முன்னின்று பாடுபட்டனர். அன்றைய போராட்டத்திற்கு ஆதரவு காட்டியவர்கள் இன்றைய திராவிடர் இயக்கத்தில் இருப்பவர்கள் எல்லோருந்தான். அப்போது பெரியாரின் கொள்கைப் பாதையில் நடைபெற்றுக் கொண்டிருந்த 'திராவிடன்' இதழ் மட்டுந்தான் தொழிலாளர்களின் நலனுக்காக குரல் எழுப்பிவந்தது ரயில்வே தொழிலாளர் போராட்டம் பற்றி மட்டும் 18—தலையங்களை எழுதிற்று 'திராவிடன்' இதழ்.

அதைத் தொடர்ந்து இன்று திராவிடர் இயக்கத்தின் முன்னோடிகள் அனைவரும் தங்களால் இயன்றவரை தொழிலாளர்களின் நலனுக்காக பாடுபட்டவர்கள்—பாடுபடுகின்றவர்கள்.

எனவே இன்றைய தினம் எஸ். ஆர் எம். யூ. ரயில்வே தொழிலாளர்கள் தோழமையை நாடி நேசக்கரம் நீட்டியிருப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல.

தொழிலாளர்கள், பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் வெற்றி பெறுவது போதுமானதல்ல சமுதாயத் துறையிலும் தொழிலாளர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்தவர்களாக விளங்க வேண்டும்.

ரஷ்யா சென்று திரும்பியதும் (நாம் செல்லமாக அழைக்கும்) கலைவாணரை, அன்று சென்னைக் கடற்கரையிலே 'கோமாளி' என்றுகேலி பேசிய காமராசர், இன்று ரஷ்யத் தலைவர்களான புல்கானினையும்—குருஷேவையும் மாலை போட்டு வரவேற்கிறார்; இதற்கு என்ன அர்த்தம்; தென்னகத்தின் உண்மையான கம்யூனிஸ்டுகளாகிய நம் கொள்கைகள் வரவேற்கப்படுகின்றன என்றுதானே பொருள்: காமராசரால் வரவேற்கப்பட்டது புல்கானினும்—குருஷேவும் அல்ல! புல்கானின் வடிவத்திலே பெரியாரும்; குருஷேவின் உருவத்திலே அண்ணாவும்தான் வரவேற்கப்பட்டனர்''

—என்று சென்னை கோகலே மண்டபத்தில் 17-12-55 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பேசும்போது மு. கருணாநிதி குறிப்பிட்டார்.

புயல் நிவாரணத்திற்கு நம் தோழர்களின் காணிக்கை!

●

சென்னை-29-30 வட்ட தி.மு.க

11-12-55 காலையில் நகரசபை உறுப்பினர் தோழர் அ. பொ. அரசு அவர்கள் தலைமையில் ஊர்வலமாக சென்று ரு. 200-3-0 1036 துணி உருப்படிகளும் 88 படி அரிசியும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்திற்காக திரட்டப்பட்டது.

திருச்செங்கோடு

நகர தி. மு. க. செயலாளரான தோழர் கே. நடேசன் தலைமையில் புயல் நிவாரணத்திற்கென ரு. 400-0-0ம், துணிமணிகளும் சேகரிக்கப்பட்டது.

கடலூர்

10-12-55 காலை 10 மணிக்கு கடலூர் பாடலி டாக்கீசில் தோழர் பி. தணிகாசலம் எம். சி. தலைமையில் புயலால் பாதிக்கட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. தி. மு. க. சார்பில் ரு. 25-0-0, பி. தணிகாசலம் ரு. 5 ம் பூ. ஆறுமுகம் ரு. 10ம் நன்கொடையாக அளித்தார்கள்.

கருகம்பத்தூர் (வ. ஆ.)

18-12-55 ஞாயிறு காலை கருகம்பத்தூரில் தி. மு. க. செயலாளர் க. கோ. நடேசன் தலைமையில் புயல் நிவாரண நிதிக்கென 8-5-0-ம், ஒரு கலம் நெல்லும் வசூலிக்கப்பட்டு தஞ்சை மாவட்டக் கலெக்டருக்கு அனுப்பப் பட்டது.

சென்னை 11 வட்ட முத்தமிழ் மன்றம்

11-12-55 காலை 9-மணிக்கு ஊர்வலமாக வட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் சென்று ரு 81-3-0 யும், 1,141 புதிய—பழைய துணிகளும் 55 படி அரிசியும் புயல் நிவாரணத்திற்கென திரட்டப்பட்டது.

சென்னை 8-வது வட்டம்

11-12-55 காலை 8 மணிக்கு 8-வது வட்ட தி. மு. கழகம், மக்கள் மன்றம் திருவள்ளுவர் முன்னணிக்கழகம், மற்றும் சில கழகங்களின் சார்பில் பெத்து நாயக்கன் பேட்டையில் ரு 100ம் 2140 துணிகளும் 120படி அரிசியும் திரட்டினர்.

திண்டுக்கல்

தி. மு. க. தோழர் பி. சமதர்மம் குழுவினர் டி. எம். எம். துரைராஜ் அவர்கள் தலைமையில் ரு. 7000 ம், 3000 கெஜம் துணியும் 3 மூட்டை சோளமும் புயல் நிவாரணத்திற்காக நன்கொடையாகத் திரட்டினர்.

சென்னை பொதுநல ஊழியர் சங்கம்

11-12-55 காலை 9-மணிக்கு ஆனைகவுனியிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு ரு 648ம்—8000 புதிய பழைய துணிகளும் புயல் நிவாரண நிதியாக திரட்டினர்.

சென்னை இளைஞர் நாடக மன்றம்

11—12—55 காலை தோழர் அர்ஜுனன் தலைமையில் ஊர்வலமாக சென்று ரு 119-8-0, 530 துணிகளும் புயல் நிவாரணத்திற்கென சேகரித்துள்ளனர்.

திருப்பத்தூர் (வ. ஆ.)

9-12-55 கே. ஜி. நாகராசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புயல் நிவாரணத்திற்கென ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவின் ஆர்வமிக்க உழைப்பினால் ரு 300, புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் உதவிக்கென திரட்டப்பட்டு முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

சிதம்பரம்

11-12-55 காலை 8 மணிக்கு, திரு. வி. க. படிப்பகத்திலிருந்து நிதிவசூல் குழுவினர் புறப்பட்டு 11-12-ந் தேதிகளில் ரு 495-ம், 5000 துணிகளும், 6 மூட்டை அரிசியும் புயல் நிவாரணத்திற்கென திரட்டினர்.

சென்னை ஆயிரம்விளக்கு

ஆயிரம்விளக்கு அறிவு வளர்ச்சி மன்றத்தினர்—புயல் நிவாரணத்திற்கென ஊர்வலமாக சென்று உண்டியல் மூலம் ரு 66-12-3 திரட்டியுள்ளனர்.

சென்னை மவுண்ட்ரோடு நடைபாதை வியாபாரிகள்

தோழர்கள் நாஞ்சில் பெ. வைரவன், அபிராமன், எம். ஏ. முகமதலி ஆகியோர் முயற்சியால் ரு 22-6-0 புயல் நிவாரண நிதிக்கென வசூலிக்கப்பட்டது.

அயனாவரம் சென்னை

உறவின்முறை நடார்கள் சங்கத்தின் சார்பில் தோழர்கள் மு. காசி, சி. தங்கசாமி, பே. குருசாமி ஆகியோர் மொத்தமாக ரு 1103-1-6 புயல் நிவாரண நிதிக்காக வசூலித்தனர்.

அண்ணாமலைநகர் மாணவர்கள்

புயல் நிவாரணத்திற்காக மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் 8 அணா வீதம் வசூலித்து ரு 800-ம், 1600 துணி உருப்படிகளும் அனுப்பப் பட்டுள்ளது.

சென்னை 16-வது வட்ட தி. மு. கழகம்

18—12—55 காலை 9 மணிக்கு அண்ணாபிள்ளை தெருவிலிருந்து பல்வேறு கழகங்கள்—சங்கங்கள் சார்பில் ஊர்வலமாக புறப்பட்டு சென்று உண்டியல் மூலம் ரு. 95-ம், 2 மூட்டை அரிசியும், 1,057 துணிகளும் புயல் நிவாரணத்திற்கென திரட்டப்பட்டது.

★

பாரிஸ் ஒழுக்க சீலர்கள்

அத்தனை பேருமே ஆச்சரியப்பட்டனர்; அவள்மீது அவனுக்கு அவ்வளவு ஆழ்ந்த அன்பு!

அவளும் அப்படித்தான், காலையில் எழுந்தவுடன் கணவனுக்கு வேண்டிய பணிவிடைகள் எல்லாம் செய்து, அவனுடன் கொஞ்சிப் பேசியும் குலவி மகிழ்ந்தும், அவன் அலுவலகம் செல்லும் வரையில் அவனுடைய இதயத்தில் இன்பநீர் பாய்ச்சிக் கொண்டிருப்பாள்!

அலுவலகத்துக்கு அவன் புறப்படுவான். அவள் விழியோரங்களிலே வேதனை கரைகட்டும் மனமில்லாமலே பிரிந்து செல்லுவான் அவன். அவன் சென்ற திக்கையே வெறிச் சென்று பார்த்து நிற்பாள் அவள்!

அலுவலகத்திலிருந்து அவன் வீடு திரும்பும்பொழுது பெரும்பாலும் இரவு பத்து மணியாகிவிடும், அலங்கார தேவதையாக அவன் வரவு பார்த்து அவள் காத்திருப்பாள். இரவு வெகு நேரம் வரையில் இன்பக் கேளிக்கை! மீண்டும் நித்திரை. ஆதவன் பொற்கரத்தின் ஆலிங்கனம்பட இருவரும் மறுநாள் காலையில் விழித்தெழுவார்கள்.

இப்படியாகக் காலமென்னும் வாய்க்காலில், அவர்களுடைய வாழ்க்கைத் தோணி இன்பமாக நகர்ந்து கொண்டிருந்தது.

★

ஒருநாள், அவன் எதிர்பாராதவிதமாக மாலை ஆறுமணிக்கே அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிவிட்டான். முன்னாலேயே வருவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது குறித்து அவனுக்குப் பெருத்த மகிழ்ச்சி. ஆனால் வீட்டில் நுழைந்தபொழுது அவள் இல்லை! ஆச்சரியத்தோடும் ஏமாற்றத்தோடும், வேலைக்காரனை அழைத்து, அவள் எங்கே போயிருக்கிறாள் என்று கேட்டான். வேலைக்காரன் சொன்னான், "வழக்கம் போல் அம்மாவை அவர்களுடைய அண்ணன் வந்து எங்கேயோ அழைத்துக் கொண்டு போனார்கள். ஒன்பது மணிக்குத் திரும்பிவந்து விடுவார்கள்" என்றான்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை அவளுக்கு ஒன்றுவிட்ட சகோதரர்கள்கூட ஒருவரும் கிடையாது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியுமாகையினால், யார் இந்தப் புதிய 'அண்ணன்'?

"எத்தனை நாளாக அவன் வந்து அழைத்துப் போகிறான்?

"அது வெகுகாலமாக நடக்குதுங்க. நாள் தவறாமல் ஐந்து அல்லது ஆறு மணிக்கு வந்திடுவாருங்க. ரெண்டுபேருமாப் புறப்பட்டுப் போனாங்கன்னா, ஒன்பது மணிக்குத் தானுங்க திரும்பி வருவாங்க அப்புறம் அவரு போயிடுவாருங்க......"-வேலைக்காரன் விஷயத்தை விளக்கினான்.

"சரி, இப்பொழுது எங்கே போயிருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?"

"நாடகக் கொட்டகைக்கு நாடகம் பார்க்கப் போகிறதா சொன்னாங்க"

"சரி, வீட்டைக் கவனிச்சுக்கோ, நான் வெளியே போய் விட்டு வருகிறதுக்குள் அவர்கள் வந்தால் நான் வந்துவிட்டதாகச் சொல்லாதே, என்ன, தெரிகிறதா?" வேலைக்காரன் கையில் ஒரு ரூபாயைச் சுண்டிவிட்டு வெளியே வேகமாக நடந்தான்.

பி. சி. கணேசன்.
பி. எஸ்ஸி; பி.டி.

அவனுக்கு விஷயம் விளங்க வெகு நேரமாகவில்லை; விபசார சகதியைப் புனருத்தாரணம் செய்வதில் தன் மனைவி ஈடுபட்டிருக்கிறாள் என்பதை எண்ணும்பொழுது அவன் இருதயமே வெடித்து விடும்போல் இருந்தது. 'ஆசையால் என்னை அடிமையாக்கி, அன்பினால் ஆராதனை செலுத்த இதயத்தையே காணிக்கையாக்கி இல்லறக் கடவுளாகி என்னை வழிபட்டவளா இப்படி எனக்குத் துரோகம் செய்து விட்டாள்'—என எண்ணி நெஞ்சம் புண்ணானான்.

நாடகக் கொட்டகையில், வேறொருவனோடு அவனுடைய மனைவி-அவனால் அந்த நிலைக் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஊரில் எப்படி அவன் மானத்தோடு வாழ முடியும். அவன் உள்ளம் கொந்தளித்தது. ஒரு முடிவோடு, கையில் கூரிய கட்டாரியையான்றை ஏந்தி நாடகக் கொட்டகை நோக்கிப் புறப்பட்டான்.

★

கொட்டகைக்குள்ளே நாடகம் நடந்து கொண்டிருந்தது. வெளியே வாயில் காப்போன் கதவை மூடி, காவலாக நின்று கொண்டிருந்தான். ஆத்திரத்தோடு ஒரு ஆள் கையிலே கட்டாரியை ஏந்தி கொட்டகையை நோக்கி விரைந்து வருவதைப் பார்த்தான்.

"ஐயா, கொஞ்சம் ஒரு இரண்டு நிமிஷம் கொட்டகைக்குள் போய்வர அனுமதி தாருங்களய்யா?" —கெஞ்சுதல் போல் அவன் உளறினான்.

கையில் கத்தியோடு, கண் சிவக்க நிற்கும் அவனைப் பார்த்துக் காவலாளி பயந்து போனான். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு விஷயம் என்னவென்று அவனிடம் வினவினான்.

"என் மனைவி—அவள் விபசாரி, ஐயா விபச்சாரி—அவளுடைய கள்ளக் காதலனோடு நாடகம் பார்க்க வந்திருக்கிறாள் அவளைக் கொலை செய்தால் தானய்யா என் மனம் நிம்மதி அடையும். என்னை உள்ளே விடுவீர்களேயானால் காரியம் சீக்கிரமே முடிந்துவிடும்; இல்லாவிட்டால் நாடகம் முடியும் வரை, அவளைக் கொல்லாமல் அவனோடு சல்லாபிக்க நான் விட்டு வைத்திருக்க வேண்டும். கொஞ்சம் தயவு செய்யுங்கள் ஐயா......"—அவன் மூச்சு விடாமல் பேசிக் கொண்டே போனான்.

அப்படியானால் நீங்கள் இங்கேயே சிறிதுநேரம் காத்திருங்கள். நான் உள்ளே போய் நிலைமை எப்படியிருக்கிறது என்று தெரிந்து கொண்டு வந்து விடுகிறேன்," என்று கூறிவிட்டு, காவலாளி கதவுகளைப் பூட்டிக் கொண்டு உள்ளே போனான்.

★

கொட்டகை மேனேஜரிடம் போய் காவலாளி விஷயத்தை விளக்கினான். நிலைமையைச் சமாளிக்கத் திடீரென்று ஒரு யோசனை அவருக்குத் தோன்றியது. நாடகத்தை மத்தியில் நிறுத்திவிட்டு ஒலிபெருக்கியில் கீழ்க்கண்டபடி அறிவித்தார்.

"யாரோ ஒரு பெண், அவளுடைய கள்ளக் காதலனோடு நாடகம் பார்க்க வந்திருப்பதாகத் தெரிகிறது. அதைத் தெரிந்து கொண்டு அப் பெண்ணுடைய கணவன் அவளைக் கொலை செய்ய கொட்டகையின் முன்புற வாயிலில் காத்துக்கொண்டு நிற்கிறார். ஆகவே, பத்து நிமிடங்கள் விளக்குகள் எல்லாம் அணைத்து கொட்டகை இருளாக்கப்படும். அப்படி யாராவது ஒரு பெண்ணும் அவளுடைய கள்ளக்காதலனும் வந்திருந்தால் கொட்டகையின் பின்புறமுள்ள பாதையின் வழியாக வெளியேறிப் போய்விடலாம்".

மேனேஜரின் இந்த அறிவிப்புக்குப் பிறகு விளக்குகள் அணைந்தன. எங்கும் இருள் சூழ்ந்தது. சில நிமிடங்களுக்குப்பிறகு விளக்குகள் மீண்டும் எரிந்தன. அப்பொழுது கொட்டகையில் ஒருவருமே இல்லை...!?!?

★

[பாரிஸ் நகர மக்களின் ஒழுக்கத்தை விளக்க எழுதப்பட்ட பிரஞ்சு சிறுகதை யொன்றின் தழுவியது.]

• ஈராஸ் பாதிரியார் மறைவு •

ஆரியமாவது—திராவிடமாவது, இரண்டும் இணைந்து ஐக்கியமாகிவிட்டது என்றுகூறி சந்தர்ப்பவாதிகள் சரித்திர அத்தியாயங்களை திரை போட்டு மறைக்க முயன்றபொழுது; 'ஆரியம் வேறுதான்—திராவிடம் வேறுதான், இரண்டும் என்றுமே இணைந்து வாழ முடியாத இருவேறு பண்பாடுகள், தனித்தனி நாகரீகங்களை அடிப்படையாக கொண்டவை;' என்று ஆணித்தரமாக எழுதிய வரலாற்றுப் பேராசிரியர் ஈராஸ் பாதிரியார் சென்ற கிழமை தமது 67-வது காலக் கோட்டில், இயற்கை யெய்தினார் என்ற செய்தி கேட்டுபெரிதும் வருந்துகிறோம்.

16 ஐரோப்பிய மொழிகளில் புலவரும்-பம்பாய் சேவியர் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியருமாக பணியாற்றி வந்த அந்த பேரறிஞரின் மறைவு திராவிடத்திற்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்; என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்பு பேசுங் கடிதம்

முல்லை-சத்தி

வான் மலர் சோலையில் பூத்துக் குலுங்கும் நட்சத்திர பூக்களை பறிக்க நிலா பெண்ணாள் வெள்ளி வீதியிலே வலம் வந்துக் கொண்டிருந்தாள். தேன் சொட்டும் மலரின் மணத்தை தென்றல் வையகத்திற் செல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருந்தது. காதலர்கள் இன்ப காவியம் தீட்டும் நேரம். கள்ளர்கள் தன் தொழிலை நடத்தும் சமயம். உலகமே அமைதி என்கிற போர் வையில் உறங்கிக் கொண்டிருந்தது. அதோ அந்த மாடியிலே இருவர் மட்டும் கருவிழிகளால் கண்ணீர் காவியம் தீட்டுகிறார்களே ஏன்? அந்த இளம் வானம் பாடிகளுக்கு அன்றிரவு தேன் நிலவு! அந்த நேரத்தில்— இன்ப காவியம் தீட்ட வேண்டிய நேரத்தில்— துன்ப கண்ணீர் கொட்டுவானேன்? தென்றலின் இனிமை இல்லை! புயலின் வாடை வீசுகிறதே ஏன்? அந்த இளம் காதலர்களின் வாழ்க்கையில் நேர்ந்த சோக நிகழ்ச்சிகள்தான் என்ன? அவனும், அவளும், கனிமொழி பேசி மஞ்சத்தில் கொஞ்ச வேண்டிய நேரத்தில் கண்ணீர் சொரிவானேன்? கண்ணே! கண்ணின் மணியே! மலரே! குளிர்தருவே! தேனே! தெவிட்டாத இன்பமே! மானே! என் மாணிக்கமே! மயிலே! குயிலே! என்று அவன் அழைக்க, ரோஜா கன்னங்கள் சிவக்க, 'அத்தான்' என அவள் அதரங்கள் அழைக்க, தன் தோளிலே அந்த தோகை மயிலை சாய்த்துக் கொண்டு, வகை வகையான இன்பத்தை கலை தன் உதடுகளால் கூறவேண்டிய வேளையில் களிப்பு, மகிழ்ச்சி கொந்தளிக்க வேண்டிய சமயத்தில், இன்பம் ஏகபோக ஆட்சி நடத்த வேண்டிய பருவத்தில்— துன்பத்தை தன் விழிகளால் எழுதுவானேன்? அவர்கள் வாழ்க்கையில் நடந்த சோக கதையை நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால், அவர்களின் வாழ்க்கை ஏட்டை புரட்ட வேண்டும். இதோ! அவர்களே தங்களுடைய சோக வரலாற்றை கூறுகிறார்கள் கேளுங்கள் :—

சங்கர் சண்முகம் பேசுகிறார் :—

இன்றிரவு எனக்குத் தேன் நிலவு! வாலிபத்தின் வசந்தம் வீசும் பருவத்தில் ஏங்கி, எதிர் பார்க்கும் இன்ப இரவு தான் எனக்கு! ஆனால் என் உள்ளத்தில் அமைதியில்லை எப்படி இருக்க முடியும்? இதோ என்னை தன் தளிர்கரங்களால் தழுவி, குளிர் பார்வையை வீசும், வளர் பிறைப் போன்ற ராதாவின் இடத்திலே இருக்க வேண்டிய இன்பவல்லி சாவூருக்குப் போய் விட்டாள். என் தோளிலே தொத்த வேண்டிய கிளி பறந்து போய்விட்டது. இன்று என் பக்கத்திலே ராதா! தாரா இருக்க வேண்டிய இடத்திலே ராதா! தாரா என் இதயத்தின் தாரகை. என் வாழ்வு வானில் வட்டமிட்ட உதய நிலவு! வானத்து தாரகைப் போல் மின்ன வேண்டியவள் மண்ணிலே புதைந்துக் கொண்டாள். வாழ்க்கை வானிலே இன்ப மழை பொழியும் குழு நிலவு சாவூரை தேடி ஓடிவிட்டது. அந்த அபலையின் சாம்பல் மேட்டிலே எங்கள் வாழ்க்கையின் எழில் மாடம் எழும்பியிருக்கிறது. அந்த சொர்ண பிம்பத்தின் எலும்புகளை செங்கல்லாக்கி, இரத்தத்தை சேறுக்கி எழும்பியிருக்கிறது எங்கள் வாழ்க்கையின் வசந்த மண்டபம். தாரா உலாவ வேண்டிய உப்பரிகையிலே ராதா! இரு துருவங்களாக—இரு முனைகளாக—இருந்த எங்களை இணைத்த இன்பவல்லி! அவளின் தியாகத் தீயிலே எங்கள் திருமணத்தை நடத்திவைத்த தியாகவல்லி! என் இதயத்திலே சதிராடிய ஒளி விளக்கு. என்னால் வஞ்சிக்கப்பட்ட வஞ்சிக் கொடி. என் இரக்கமற்ற இதயப்பசிக்குப் பலியான பூங்கொடி. வார்த்தைகளிலே வர்ண ஜாலம் காட்டி, அவளின் வாழ்க்கையையே சூறையாடினேன். கறை படிந்துபோன அவளின் வாழ்க்கைக் காவியத்திற்கு ஒரு துளி விஷத்தால் முடிவுரை தீட்டி விட்டாள்... அவளின் துன்ப கண்ணீர் மேல் கட்டப் பட்டிருக்கிறது எங்களின் இன்ப மாளிகை!

சங்கர் சண்முகம் என்றால் அந்த ஊரில் உள்ள எல்லோருக்கும் தெரியும். கல்லூரியின் பேராசிரியர் அல்லவா நான். சிறிய வயதில் பெரிய பதவியை வகிக்கும் எனக்கு மரியாதையும், கௌரவமும் தேடி வந்தது. பெரிய மனிதர்கள் வரிசையிலே நானும் சேர்க்கப்பட்டேன். வாலிபத்தின் கருக்கலிலே நான் நடந்து கொண்டிருந்தேன். கை நிறைய சம்பளம்—கௌரவமான உத்தியோகம்— மாணவர்களிடத்திலே நல்ல செல்வாக்கு! மக்கள் இதயத்திலே எனக்கு நல்ல மதிப்பு— பெருமையும், பூரிப்பும் என் காலடியில்! அந்த நேரத்திலே தான் இருவர் குறிக்கிட்டார் என் வாழ்க்கையில்! ஒருவள் ராதா! மற்றொருவள் தாரா! இருவருமே இரு துருவங்கள். ராதா, மன்னிக்கவும். டாக்டர் ராதா! அந்த ஊரிலே பிரபலமான டாக்டர்! அந்த ஊர் மக்களுக்கு அவள் மேல் நீங்கா பற்று உண்டு. கை ராசியுள்ள டாக்டர் என்பதால் மட்டுமல்ல, வரும் நோயாளிகளை வரவேற்று அவர்களின் உபாதையை தன் உபசரிப்பாலேயே குறைத்து விடுவாள். டாக்டர்களிடத்திலே இல்லாத ஒரு நற்பண்பும் அவளிடம் இருந்தது. அவளுக்கு இருதயம் இருந்தது. அதிலே இரக்கமும் சுரந்தது. பணம் வந்தால்தான் 'ஸ்டெத்தஸ்கோப்' எடுப்பேன் என்று கூறும் டாக்டர்கள் வாழும் சகாப்தத்தில் அவளுக்கு பணம் பெரிதல்ல! நோயாளியின் வாதை குறைந்தால் போதும் என்று எண்ணும் நல்லெண்ணம்கொண்டவள் ஆகவே அந்த ஊர் மக்கள் அவளைப் போற்றி புகழ்ந்ததில் வியப்பொன்றும் இல்லை. அவளின் அழகும் நற்பண்பும், மக்களிடத்திலே ஒரு நிரந்தர இடத்தை தேடிக் தந்தது அந்த தேன் மொழியாளுக்கு.

நாங்கள் இருவரும் பொது மேடையிலே சந்தித்தோம். எங்களின் சந்திப்பு, நட்பாக வளர்ந்தது!

தாரா! என் பக்கத்து வீட்டின் குலவிளக்கு! பருவத்தின் பூரிப்பு அவள் பொன் மேனி எங்கும், ஆனால் சோகத்தின் சாயல் அவள் எழில் முகத்தில்! அவள் முகத்திலே பொலிவு இல்லை நெற்றியிலே குங்குமம் இல்லை. கூந்தலிலே மலர் இல்லை. ஆம்! அவள் ஓர் விதவை! சமதாயத்திலே ஒரு செல்லாக்காசு! கசங்கிய மலர்! உடைந்த வீணை! இன்ப நாதம் எழுப்ப வேண்டிய பருவத்தில் துன்ப கீதம் இசைக்கும் வானம்பாடி. பொன் நகையும், பொன் மலரும் அணிந்து இதழ்களிலே புன்னகை தழுவ கண் நிறைந்த கணவனுடன் கொஞ்ச வேண்டிய பருவத்தில், உணர்ச்சிகளை எல்லாம் தன் நெஞ்சத்திலே தேக்கி—விழிகளால் கண்ணீரை சொரிந்து, தன் காலத்தை கழித்துக் கொண்டிருந்தாள் அந்த பரிதாபத்துக்குரியவள்.

முதலில் மாலைவேளையில், தோட்டத்து வாசலில் அவளின் மலர் முகம் தெரியும்—என் இதயம் குளிரும். முதலில் எங்கள் விழிகள் பேசிக் கொண்டன. பின் மொழிகள் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு எங்கள் தோழமை வளர்ந்தது.

ராதா! தாரா! இருவரும் இரு துருவங்கள். ராதா! பூத்துக் குலுங்கும் புது மலர்! இன்ப நாதம் எழுப்பும் எழில் வீணை! உதய நிலவு! தாரா! கருகிய மொட்டு! உடைந்த வீணை! தேய்ந்த நிலவு!

பலரறிய நானும் ராதாவும் பழகினோம்! யாரும் அறியாமல் நானும் தாராவும் சந்திப்போம்! ராதா வலிய, வலிய வந்து என்னிடம் பேசுவாள்! தாரா பயந்து பயந்து பேசுவாள்.

ஒரு நாள் என் அறையில் புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தேன். கன்னங்களில் குழிவிழ புன்னகை புரிந்துக் கொண்டே ராதா நுழைந்தாள் புயலில் சிக்கிய படகு போல் எங்கள் உரையாடலும் சுற்றிக் கொண்டிருந்தது.

"உங்கள் இடத்திலே ஒன்று கேட்கிறேன் தருவீர்களா?" என்று திடீரென்றுக் கேட்டாள் ராதா. அவள் விழிகளிலே

பொங்கல் மலர்

1956.

★

கருணாநிதி எழுதும்....

தென்னவன் காதை

(வீர காவியம்

★

அரும்பு

(உணர்ச்சிக் கதை)

★

கிரேக்கப் பெரியார்

(கொள்கை நாடகம்)

★

பரதாயணம்

(கேலிச் சித்திரம்)

★

குறளோவியம்

(வர்ணனை ஓவியம்)

★

இத்தனையும் உண்டு! இத்தனைய ஏனையோர் எழுத்துச் சுவைகளும் உண்டு! அத்தனையும் கற்கண்டு!

விலை இரண்டே ரூபாய்!

ஏக்கம். முகத்திலே நாணம். என்ன வேண்டும் ராதா? கேள்! முடிந்தால் தருகிறேன்,

தங்களின் இதயம் வேண்டும்?

என்ன என் இருதயமா? ஏதாவது ஆராய்ச்சி நடத்தப் போகிறீர்களா?

இல்லை. ஆசனமாக்கிக் கொள்ளப் போகிறேன். தங்களின் இதயத்தை சிம்மாசனமாக்கி அதில் வீற்றிருக்க விரும்புகிறேன்.

ராதா!

ஆமாம்! காதல் பிச்சை கேட்கிறேன்.

ராதா! காதல் பிச்சை இடுவதில்லை...

விலைக்கு கிடைக்குமா? என்ன விலை வேண்டும்?

உள்ளத்து உதிரம் தேவையா! என் விழிகளின் கருமணிகள் வேண்டுமா? எது வேண்டும் சொல்லுங்கள் உங்கள் காலடியில் காணிக்கையாக்குகிறேன்.

ராதா! காதல் விலைக்கு கிடைக்கும் பொருள் அல்ல! அதை விற்கும் கயவனும் அல்ல நான்!

சங்கர்!

ஆமாம் ராதா! என் உள்ளம் உனக்கு உகந்த இடம் அல்ல! மன்னித்துவிடு!

என் எண்ணமெல்லாம் மண்தானா? எட்டாத நிலவுதானா நீங்கள்! கிட்டாத தேன் தானா?

விழிகளை குளமாக்கி வழி நடந்தாள் ராதா! தங்கத் தாமரைப் போன்ற அவள் முகம் வாடி வதங்கி விட்டது உடைந்த உள்ளத்தோடு இடிந்த இதயத்தோடு அந்த உதய நிலவு மறைந்தது.

ராதாவிடத்திலே எனக்கு மதிப்பு, மரியாதை, அன்பு, ஆசை பாசம், நேசம் எல்லாம் இருந்தது. ஆனால் காதல்தான் இல்லை! என் வாழ்க்கையின் துணையாக இணைத்துக் கொள்ள என் உள்ளம் விரும்பவில்லை. உள்ளத்தின் ஆசையையும், இதயத்தின் பசியையும் யார்தான் புரிந்து கொள்ள முடிகிறது?

அன்று மாலை கல்லூரியிலிருந்து என் இல்லத்துக்கு வந்தேன்! தாரா! அவளின் தோட்ட வாயிலிலே நின்று கொண்டிருந்தாள் அவளின் உதடுகள் பேசத் துடித்தன. 'என்ன தாரா? என்ன செய்கிறாய்? என்றேன் நீங்கள் வருகிறீர்களா என்று வழி மேல் விழி வைத்து இருந்தேன்.... " அவள் கன்னங்கள் வெட்கத்தால் சிவந்தன. பேச்சு குளறியது.

ஆமாம். அப்பா, அம்மா எங்கே?

பக்கத்து ஊரில் பெரியம்மா இறந்து விட்டார்கள். அதற்காக போய் உள்ளார்கள்...

அப்படியா...?

தலை அசைவிலே பதில் அளித்தாள்.

என் தாரா! இப்படி வாயேன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்போம்......

ஊஹூம்...

இங்குதான் யாரும் இல்லையே ஏன் பயப்படுகிறாய்? அவள் பேசா மடந்தையானாள். அவளின் தளிர் விரல்களைப் பற்றினேன். பருவத்தின் உணர்ச்சிகளும், பயமும் அவள் முகத்திலே போட்டி போட்டு ஆலவட்டம் சுற்றியது.

தாரா! உன்னைக் காணவே கலங்குகிறது என் கண்கள். பளிங்கு சிலை போன்ற உன் மேனி புழுதியிலே புரளுவதைப் பார்க்கும் போது என் உள்ளம் வேதனையால் விம்முகிறது. கண்ணே! கலங்காதே! உன்னை என் இதயராணியாக்கிக் கொள்ளுகிறேன். பாழடைந்து போன உன் வாழ்வு புத்தொளி பெறட்டும். தாரா! சரி என்று சொல்! உன்னை காலமெல்லாம் சிரிக்க வைக்கிறேன். ஆசை அலை மோதிற்று அவள் உள்ளத்தில். மகிழ்ச்சியால் இதயம் விம்மியது அந்த முல்லைக் கொடி என் மேல் படர்ந்தது. அந்த முல்லையின் மணத்தை நானும் நுகர்ந்தேன்.

தாரா கூறுகிறாள்:

ஆமாம்! தேனை உண்டபின் வண்டு ஓடி விட்டது. உணர்ச்சிப் பெருக்கில்—பருவத்தின் பூரிப்பில் என் வாழ்வு மலர் இதழ் விரித்து சிரித்தது: அறியா பருவத்தில்—மணல் வீடு கட்டி—மரபொம்மை வைத்து விளையாடும் வயதில் எனக்குத் திருமணம் செய்து வைத்தனர் என் பெற்றோர். பள்ளியில் துள்ளி விளையாடும் பருவத்தில் பொற்றாலி கட்டினர் எனக்கு. என்னை மணந்த மணவாளன் மாண்டு போனார். அப்போது எனக்கு வயது பத்து. காலம் மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது. நானும் பருவத்தின் படிகளிலே காலடி வைத்தேன். மலர் சூடக்கூடாது. குங்குமம் இட்டுக் கொள்ளக் கூடாது என்றெல்லாம் என் பெற்றோர் தடை விதித்தனர். வீடே எனக்கு சிறைச்சாலை. என் பெற்றோரே காவலாட்கள். மக்கள் மன்றம் இந்த தண்டனையை எனக்கு அளித்தது. உடலைத் தான் சிறை வைக்க முடிந்ததே தவிர என் உள்ளத்து உணர்ச்சிகளை — கொந்தளிப்பைத் தடுக்க முடியவில்லை அவர்களால். கணவனும், மனைவியும் சேர்ந்து போகும் காட்சியை காணும் தோறும் என் இதயம் அழும். அப்போதுதான் சங்கர் என் வாழ்விலே குறுக்கிட்டார். விழிகளுக்கு மட்டும் விருந்தாக இருந்தவர் என் இதயத்துக்கும் விருந்தானார் என் உடலின் ஒவ்வோர் அணுவும் பருவத்தின் பூரிப்பில் துடித்துக் கொண்டிருந்தது. என் இதயம் இன்பத்தை தேடி அலைந்தது. என் உள்ளத்தின் துடிப்பை என்னால் அடக்க முடியவில்லை.

சங்கர் கூறிய உறுதி மொழியிலே - சாகச சொற் கோர்வையிலே, என் இதயத்தை அவர் காலடியில் வைத்தேன். அந்தப் புலி என் இதயத்தின் உதிரத்தை குடித்து விட்டு ஓடி விட்டது. அவன் தந்த அமுதம் என் வயிற்றிலே விஷமாக வளர்ந்தது.

ஒரு நாள் சங்கரைச் சந்தித்து என்னை மணந்து கொண்டு, மாசு படிந்த என் வாழ்வை துடைக்க வேண்டினேன். கெஞ்சினேன். கதறினேன்.

அய்யோ! பாவி! புவியிலே உலாவ முடியாது இனிமேல்! என்னை உன் மனைவியாக ஏற்றுக் கொள். காலமெல்லாம் உன் கால்களை கண்ணீரால் அபிஷேகம் செய்கிறேன்...

தாரா! உன்னை மணந்து கொண்டால் உலகம் கைகொட்டி சிரிக்கும். என் மானம், மரியாதை, அந்தஸ்து கௌரவம் எல்லாம் காற்றில் பறந்து விடும் என் வாழ்வும் பாழடைந்து விடும். உன் வயிற்றிலே வளருகிறதே அதை சிதைக்க..." என்று அவர் கூறிக் கொண்டிருக்கும்போது டாக்டர் ராதா உள்ளே நுழைந்தாள்.

ராதா கூறுகிறாள்:

என்னைக் கண்டதும் இருவருமே திடுக்கிட்டனர். தாரா புழுப்போல புழுதியிலே புரண்டு கொண்டிருந்தாள். சங்கர் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

ராதா! என்று அவர் வாய் குளறியது.

சங்கர்! எல்லாமே கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஒரு அபலையின் வாழ்வை பாழாக்கிய படுபாவி துன்ப தேம் இசைக்கும் கருணையில் நீ வீணை வாசிக்கிறாய் அவளின் வேதனை உனக்கு எப்படி தெரிய முடியும்?

ராதா! மன்னித்து விடு ராதா! அவளின் கர்ப்பத்தை சிதைக்க மருந்து கொடு ராதா! உன்னால் தான் முடியும். யாருக்கும் தெரியாமல் செய்து விடலாம் இந்த உதவியை நீ செய்தால் காலம்முழுதும் மறக்க மாட்டேன். தாராவின் வேதனையும் மறையும் என் மானமும் பிழைக்கும்...

முடியாது! இந்த பாபச் செயல் செய்ய என் உள்ளம் சம்மதிக்காது.

ராதா! கைவிட்டு விடாதே... அந்த அபலையின் கண்ணீருக்காவது நீ இந்த உதவி செய்ய வேண்டும். கண்ணீர் சொரியும் அந்த காந்த சிலையைப் பார்! உன் இதயத்திலே இரக்கம் சிந்தும். உன் காலடியில் விழுந்து கெஞ்சுகிறேன். நெஞ்சு இளகவில்லையா உனக்கு.

இல்லை. என் கண்ணீரை மலராக்கி உன் காலடியில் கொட்டினேனே அன்று உங்கள் இதயம் இளகவில்லை. என் இதய வேதனை உங்களுக்கு இன்பமாக இனித்தது வேதாந்தியைப் போல என்னை வெறுத்துப் பேசிய உத்தமர் இன்று ஒரு விதவையின் வாழ்வை பாழாக்கி அவளின் கண்ணீரிலே நீச்சல் விளையாட்டு விளையாடுகிறீர் வெட்கமாயில்லை. சங்கர்! ஏடு பல கற்றவர் - நாடு சுற்றிய காவலர். மாணவர்களின் மரியாதையையும், அன்பையும் ஒருங்கே பெற்ற ஒழுக்க சீலர் மக்களின் மனதிலே தேனென இனிக்கின்றவர் என்றெல்லாம் பாராட்டி புகழப்பட்ட நீங்கள் ஓர் அபலையின் வாழ்வை சூறையாடி விட்டீர்! உன் முகமூடியை கிழித்தெறிகிறேன் பார்! உன் சுய உருவத்தை மக்களுக்கு காட்டுகிறேன்" என்று கூறி நான் வீடு திரும்பினேன். என் உள்ளத்தில் புயல் வீசிக் கொண்டேயிருந்தது.

என்னை மணக்க மறுத்தார் சங்கர். ஆனால் என் மனம் அவரை மறக்கவில்லை. என் இதயத்தில் ஆழமாக பதிந்து விட்ட அந்த உருவத்தை எப்படி மறக்க முடியும்? என் விழி நிறைய அவரைப் பார்ப்பதிலே பரவசப் படுவேன். அவர் நெஞ்சு நெகிழும். என் மனமும் மகிழும் நாள். வரும் என்று எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து நாட்களை எண்ணிக் கொண்டிருந்தேன்.

அன்று சிலை போல் நின்ற சங்கரையும், கண்ணீர் வெள்ளத்தில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த தாராவையும் கண்டதும் என்னால் நம்பவே முடியவில்லை. என் கண்கள் என்னை ஏமாற்றி விட்டதா என்றுகூட நான் சந்தேகித்தேன்.

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

பொங்கல் மலர்

1956.

★

★ எண்ணத் தெவிட்டாத வண்ணமலர்ச் சோலையாய்...

★ திராவிட மண்ணுக்கு உரியோரின் உடை வாளாய்...

★ கண்ணுக்கு நிகர் பெண்ணுக்குப் பெருமை தரும் பொன்னேடாய்...

★ செங் கரும்புச் சுவை சிந்தும் இள மழலைச் செல்வங்களின புது மலராய்..

★ தொழிலாளத் தோழர்களின் புரட்சிப் பாசறையாய்...

★ மாணவர்க்குப் பாடிவீடாய்...

★ சித்திரக் கருவூலமாய்...

★ செந்தமிழ்த் தேன் கூடாய்த் தயாராகிறது,

தங்கம் நிகர், மலர்!

“முரசொலி”

பொங்கல் மலர்

★

அவாள் ஏடுகளுக்குச் சவால் விடும் அளவில், அறிவுக் கதிர் பாய்ச்சும் காவியத் தொகுப்பாக உருவாகிறது!

விலை இரண்டே ரூபாய்தான்

Filmed as bound

கொள்ளைக் கூட்டம்!

பாளையங்கோட்டை

அன்புள்ள ஆசிரியருக்கு,

"......மான்சிங்கைப் போலவே வட இந்தியாவில் இன்னும் பல கொள்ளைக் கூட்டங்கள் இருக்கின்றன. உலகத்தில் இதுபோன்ற கொள்ளையும் கொலையும நடைபெற்றுவரும் இடம் இப்பொழுது வட இந்தயாதான் என்றுமிகுந்த வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது"

இந்த சொற்கள் நவம்பர் 27-ந் தேதி 'கல்கி' இதழில் காணப்படுகிறது. 'வட இந்திய யாத்திரை' எனும் தொடர் கட்டுரையில் ஒரு எழுத்தாளர் எழுதியிருக்கிறார்.

வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. இப்படிப்பட்ட இரு நாடுகளும் இணைந்திருப்பது சரியல்ல திராவிடநாடு பிரிந்தே ஆக வேண்டும் என்று நாம் கூறிவரும் கருத்துக்கு இது முரண்பட்டதல்ல. இரு நாடுகளுக்கும் உள்ள வேற்றுமைகளைக் கூறி திராவிட நாடு பிரிந்தே ஆக வேண்டும் என்று நாம் வெளிப்படையாகக் கூறுகிறோம்; ஆனால் அந்த எழுத்தாளரோ வடநாடு எப்படிப்பட்டது என்று எடுத்துக் காட்டுவதுடன் நின்று விடுகிறார்.

மான்சிங் பெரிய கொள்ளைக்காரனாக மாறியதற்குக் காரணம் பார்ப்பனியம்தான் என்ற கருத்தும் அந்தக் கட்டுரையில் காணப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் மான்சிங் குடும்பத்திற்கும் துல்பிராம் என்ற ஒரு பிராமண குடும்பத்திற்கும் ஏற்பட்ட சச்சரவு நீதிமன்றம் வரை சென்றதாம். தன்பக்கம் நியாயம் இல்லை என்பதைத் தெரிந்த துல்பிராம் சர்க்கார் அதிகாரிகளுக்குலஞ்சம்கொடுத்து சரிசெய்துவிட்டாராம். தன் பக்கம் நியாயம் இருந்தும் தான் தண்டனை அநுபவிக்க வேண்டியதாயிற்றே என்ற உணர்ச்சிதான் மான்சிங்கைப் பெருங்கொள்ளைக்காரனாக ஆக்கியதாம். பார்ப்பனியத்தால் விளைந்த பயனைப் பாருங்கள்.

தேசிய இயக்கத்தைச் சார்ந்த "அவாள்" பத்திரிகையில் வந்த இந்த இரு குறிப்புகளும் நமது கொள்கை எந்த அளவிற்குவெற்றி பெறுகிறது என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டு.

அன்பன்,
அ. துரைராஜ்

★

கூடாத 'வெறி'

கோவை
24—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

தற்பொழுது நமது மத்திய அரசாங்கத்திலுள்ள சிலர் இந்தி வெறி பிடித்தலைகிறார்கள். தூக்கத்திலே தட்டி யெழுப்பினாலும் இந்தி இந்தியென்றுதான் பிதற்றுவார்கள். தமிழகத்தில் முதலில் புகைவண்டி நிலயங்களில், பிறகு தபால் அட்டைகளில் இந்தியைத் திணித்தார்கள். தற்பொழுது ரயில்வேத் துறையில் இந்தி எழுதப் படிக்கத் தெரிந்தால்தான் வேலை கிடைக்குமென்று முடிவு செய்திருக்கிறார்கள். ரயில்வேத் துறை இந்திய உபகண்டத்திலுள்ளோர் அனைவருக்கும் பொதுவானது இத்தகைய நிலையில் ஒரு குறிப்பிட்ட மொழியைக் கற்றால்தான் வேலை கிடைக்குமென்று எங்ஙனம் கூறலாம்? நாட்டில் இன்றுள்ள அவலநிலையில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயராமல் இருக்கின்ற நிலையில் — அடுத்தடுத்து இவர்கள் தீட்டுகின்ற. ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக, தங்களிடமிருப்பதை வரிகளாகக் கொடுத்துவிட்டு வரண்ட பாலைவனமாக காட்சியளித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இந்தியைப் பற்றி வானளாவப் பேசுகின்றனர். இதில்தான் இவர்களது வீரத்தைக் காணலாம். நிர்வாகத்திலோ?

பரிதாபப் படுகிறோம், இவர்களைத் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய வாக்காளர்களுக்காக. நமது தமிழகத்து பரதிநிதிகள் பாராளுமன்றத்தில், இது விஷயத்தில், இந்தயைத் தமிழகத்தில் திணிக்காமலிருக்க தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா? இந்த விஷயத்திலாவது தமிழகப் பரதிநிதிகள் சிறிதளவாவது தாயகத்தின மீதும், தமிழ் மீதும் பரிவு கொண்டு, மாற்றார்களுக்கு — இந்தி வெறி பிடித்தவர்களுக்கும் பணிந்துவிடாமல் பாராளுமன்றத்தில் வாதிட வேண்டும். குறிப்பாக இந்திக் கமிஷனில் அங்கம் வகிக்கின்ற டாக்டர் சுப்பராயன் போன்றவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் இந்தி வெறியர்கள் தலை குனிய வேண்டும்.

சி. கே. நடராசன்.

★

உணர்வார்களா?

இராமநாதபுரம்
2—12—55

ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். இந்நாட்டு அரசியலின் போக்கு தவறான வழியிலே—தடைகளைப் பொருட்படுத்தாது வளர்ந்து வருவதைக் கண்டு நாங்கள், கல்லூரி மாணவர்கள் — அச்சமும் வாட்டமும் ஒருங்கே அடைந்துள்ளோம். காங்கிரசாரின் அரசாட்சி மக்களின் நலம் கருதாமல்—தன்னிச்சையாகத்தான் நடந்து வருகிறது. இவற்றையெல்லாம் காணுங்காலை, அறிஞர் மு வரதராசனார் தமது "தமிழ் நெஞ்சம்" என்ற நன்னூலில் கூறிய கருத்துக்களைப் படிக்குங்கால், காங்கிரசாரின் குணங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறார் என நன்கு அறிகிறோம்.

அறிஞர் மு. வரதராசனாரின் நறுகருத்துக்கள்:

"உலக முற்போக்கு, அரசியல் கட்சிகளை அமைத்து, தலைவரைத் தேர்ந்தெடுத்து, அவர்க்கு வேண்டும்போது வேண்டுவன கூற அவைகளும், மன்றங்களும் நிலை பெறச் செய்துள்ளனர். ஆயினும், ஒரு குறை உள்ளது. எவர் கூறினும், கேட்டு உண்மை நாடும் உள்ளம் இன்னும் அரசியல் தலைவர்களில் சிலர் பெறவில்லை. தம் கட்சியார் கூறுவன எல்லாம் கொள்ள முனைந்து, பிற கட்சியார் கூறுவன கேளாமலே தள்ளுகின்றனர் ஒரு கட்சியார் தம் குறைகளைத் தாமே காண்பது அரிது. பிற கட்சியாரே எளிதில் காண்பர். ஆதலின் அவர் கூறுவனவும் கேட்டல் வேண்டும் என்னும் நல்லறிவு இன்னும் பயன்தரும் முறையில் வளரவில்லை. கட்சிப் பற்று வேரூன்றி நின்று, உண்மை காணுதவாறு தலைவர்க்கு குறைவு ஏற்படுத்தி, அரசியலைக் கெடுத்து வருகிறது பிற கட்சியார் சொல்வன நல்லன எனினும் கேளாது, அவர் செய்வன தக்கன எனினும் போற்றாது புறக்கணித்தல் காலப் போக்காக உள்ளது நல்லன, தீயன என்ற ஆராய்ச்சியின்றி, எதிர்க்கட்சியாரின் சொல், செயல் எல்லாம் அடியோடு புறக்கணிக்கப் படுகின்றன. தம் கட்சியார் கூறுவன எல்லாம் நம்பும் நம்பிக்கையும், அவர் செய்வன எல்லாம் போற்றும் நடு நிலையின்மையும் பெருகி வந்துள்ளன,

ஆதலின், இக்கால ஆட்சி முறையை அரசியல் என்னாமல், கட்சியியல் எனலே பொருந்தும்."

இவ்வாறு அறிஞர் வரைந்திருப்பதைப் படிக்குங்கால காங்கிரசாரின் நற்(!) குணங்கள் சுட்டிக் காட்டப்படுதல் அறியலாம்.

நாமெல்லோரும் இந்தித் திணிப்பை எதிர்த்த பொழுது, அவ்வாட்சி சிந்தை மகிழ வரவேற்பதழ் வாசித்தளித்தது; கல்லக்குடி போராட்டத்தின் போது, வடநாட்டானுக்கு உதவியாக சொந்த நாட்டான் மீது துப்பாக்கியைத் திருப்பிற்று 'தமிழ் நாடு' என சென்னை மாகாணத்தின் பெயரை மாற்ற என்ன அவசரம்' என வினவுகிறது; தாய் மொழியாம் தமிழிலே அரசியல் நடத்த அச்சப்படுகிறது. எப்படி இருக்கிறது ஆட்சி?

'நாட்டு மக்களின் நலனைக் கருதுகிறேன்' என உதட்டளவில் உரைத்துவிட்டு, நாட்டின் நாச வேலைக்கு ஆக்கம் தேடுகிறது. மதுவிலக்கை ஒழித்தார்களாம்! ஆனால் மது இருப்பதோ காங்கிரஸ் உறுப்பினர்களின் கையில். இன்னும் எத்தனையோ இழுக்குகள் அவர்மாட்டு அமைந்துள்ளன. எண்ணற்ற அளவிலே— தீர்க்கத் தீர்க்கக் குறையாததாய்— அமைந்துள்ளன.

அன்பன்,
ப. சண்முக சுந்தரம்.

★

மதக்காவலர்கள்!

கட்டுமாவடி
3-12-55

ஆசிரியர் அவர்களுக்கு,

இந்தியா மதச்சார்பற்ற நாடு' எனப் பிதற்றித் திரிகின்றனர் தேசியத் திருவாளர்கள்! காசியிலே ஜனாதிபதி ராஜேந்திரர் பார்ப்பனர்கட்கு பாத பூஜை நடத்தியதையும், சோமநாதர் ஆலயத்தை சர்க்கார் செலவில் செப்பனிட்டதையும், நாட்டின் ஆளும் சின்னமாக 'ஆலயம்' இருப்பதையும் மறந்து.

இன்றைய அரசினர் 'இந்து மதத்தின் பாதுகாவலர்கள் என்பதை நல்லவர்கள் அறிவர்—பிற மதத்தார்க்கு இந்தியாவில் பாதுகாப்பில்லை என்பதை பாதிக்கப் பட்டோர் அறிவர்! ஆலயங்கள் நிர்மாணிப்பதும், ஆறுகால பூஜைகள் நடத்துவதும், அர்ச்சகர்களுக்கு உத்தரவாதம் அளிப்பதும் தவிர அரசினர்க்கு வேறு வேலை இல்லை. "இந்தியா"— "இந்துமதம்"—இவை இரண்டை மட்டும்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில் அரசினர் பெரும் சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர் எடுத்துக் காட்டாக,

சென்றமாதம் சென்னைக்குவந்த சோவியத் தலைவர்களுக்கு, சென்னை 'ராஜபவனம்' கொடுத்த வரவேற்பு புதுவிதமாக இருக்கிறது-நம்புத்தியைக் குழப்புகிறது தலைவர்களை, சென்னை கேசவப் பெருமாள் கோவில் அர்ச்சகர்கள் மந்திரங்கள் ஓதி —ஆரத்தி எடுத்து வரவேற்றனராம். பல மதக்காரர்கள் உள்ள சென்னை, அர்ச்சகர்களை விட்டு மந்திரம் ஓதச் சொன்னது 'இந்து' மதத்தின் மகத்துவத்தைக் காட்டத்தானே? இது, இதர மதத்தினருக்கு பேரிடி! பொறுத்துக் கொள்ள முடியாதது!

ஆரிய அர்ச்சகர்கள் 'மதம் அபின்' எனக் கருதுபவர்களிடம் கூட கைவரிசைக் காட்டத் துணிந்தது 'அரசினர்' ஆதரவால் தான் என்பதை மக்கள் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்— இதற்கோர் முமவு காண வேண் வேண்டும்!

அன்புள்ள,
எஸ். சிவானந்தன்.

★

அன்புள்ள ஆசிரியருக்கு,

சென்ற 16-12-55 இதழ் முரசொலியில் மு. க. வின் 'அய்யோ ராஜா!' சிறுகதை ஏழைகளின் வாழ்வையும்-அதே நேரத்தில் ஏகாதிபத்தியத்தார்களின் சென்னை விஜயத்திலே ஏற்பட்ட போக்குவரத்து தடங்கல்களையும் படம் பிடித்துக் காட்டுவதாக இருந்தது. இம்மாதிரி சிறுகதைகள் அடிக்கடி முரசொலியில் இடம்பெற வேண்டுமென விழைகிறேன். 'கல்லறை விழுங்கிய போதும் கண்ணீர் விடாத கர்ம வீரர்களின் வரலாறுகள்' சென்ற இதழில் வெளிவந்த செர்விட்டஸ் போன்றவர்களின் வரலாறுகள் முரசொலியில் தொடர்ந்து எதிர்பார்க்கிறேன்.

அன்பு
இராம. வரதராசன்.
சென்னை-14.

★

★ மதுரைத் திருவிளையாடல் புராணம் ★

மன்னிப்புக் காண்டம்!

கனம் நீதிபதியவர்களே!

கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் எங்களை மன்னித்து விடுங்கள்! நாங்கள் குற்றவாளிகள்தான் என்பதை பகிரங்கமாக ஒப்புக் கொள்ளுகிறோம். வேண்டுமென்றே குழப்பத்தை உண்டாக்கினோம். அதையும் ஒப்புக் கொள்ளுகிறோம்!

நல்லவர்கள் இதயத்தைப் புண்ணாக்கி விட்டோம்; கடமை—கண்யம்-கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை ஜீவ லட்சியமாக கொண்டோரை-காலித்தனமாக தாக்க முயன்றோம்; அராஜகத்தை விலை கொடுத்து வாங்கி-கையிலே கம்பும்-கட்டாரியுமாக 'பாரதப் பண்பாட்டினை' புனருத்தாரணம் செய்யமுயன்றோம்; ஒழுக்கத்திலேயே பிறந்து வளர்ந்த லட்சியவாதிகளிடம் ஒழுங்கீனமாக நடந்துகொண்டோம்: நாங்களாக இந்த குற்றத்தை செய்யவில்லை; 'மதவெறி' எங்கள் இதயத்தைத் தின்று விட்டது; மதிகெட்டுப் போனதால் மனித நிலையில் இருந்து இறங்கி விட்டோம்! எங்கள் சுயநினைவு தவறி இருந்தபோது நிகழ்ந்து விட்ட குற்றத்திற்காக எங்களை மன்னித்து விடுங்கள்; இனியொருமுறை இத்தகைய இழி செயல்களில் இறங்க மாட்டோம்;

'இராமனைக்' காப்பாற்றப் போய்—இனத்துரோகிகள் என்ற இழிவைத் தேடிக் கொண்டோம்; அறிஞர்களின் வெறுப்பிற்கு ஆளானோம்; குழப்பத்தை விளைவிக்கும்படி எங்களைத் தூண்டிவிட்டவர்களோ—இன்று தூர விலகி நிற்கிறார்கள்; அறிவியக்கவாதியின் சார்பிலே வாதாடவந்த வக்கீல்—எங்களுக்காக பேசிப் பார்த்த வக்கீலை வாயடைக்கச் செய்துவிட்டார்; இந்த நிலையில் குற்றத்தை பகிரங்கமாக ஒப்புக் கொள்வதைத் தவிர—வேறொன்றும் செய்யமுடியாத பரிதாபகரமான நிலையிலே நிற்கிறோம்.

அவனடியார்க்கு 'அது' கிடையாது என்பார்களே—அந்த வாசகம் எங்களைப் பொறுத்தவரை உண்மையாகி விட்டது; 'அது' இல்லாமல் போய் விட்டதால்தான் அன்றைதினம் கொடுமைகளைப் புரிந்தோம் — கோரதாண்டவம் ஆடினோம்! 'ஆஸ்தீகம்' என்ற பெயரால் அறிவுலகம் கை கொட்டி சிரிக்கும்படி நடந்து கொண்டோம்; எங்கள் 'கயமைக்கு'கழுவாய்த் தேடிக் கொள்ள தயாராக இருக்கிறோம்; தயவுசெய்து எங்களை 'மன்னித்துவிட்டேன்' என்று ஒருமுறை கூறிவிடுங்கள்.

நீதியின் காவலரே! புகையும் வெடிமருந்துச் சாலை—புரட்சியாளர்களின் நெஞ்சம்! என்ற உன்னத தத்துவத்தை மத 'போதை' கொண்டலைந்த எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை!

நாங்கள் பேயாட்டம் ஆடிய போதும் — பொறுமையோடு நடந்துகொண்ட அந்த புதுமை விரும்பிகளின் பெருந்தன்மையை எண்ணி எண்ணி அவமானப் படுகிறோம்! 'ஆஸ்திகப் படை' என்ற பெயரால் காலிகளையும், சத்திரத்துக் கூலிகளையும் ஏவிவிட்டோம்; இன்று நேர்மைக்கு முன்பாக தலை வணங்கி நிற்கிறோம்!

தழைத்துவரும் திராவிடர் இயக்கத்தைப் பற்றி தப்புக் கணக்குப் போட்டு வைத்திருந்தோம்; நியாயத்திற்கும், நீதிக்கும் முன்னால்—அது தவிடு பொடியாயிற்று; நாட்டோரின் நிந்தனைக்கும்—நல் இதயம் கொண்டவர்களின் கண்டனத்துக்கும் ஆளாகி 'கடைக்குணம்' படைத்தவர்கள் என்ற இழிவையும் பெற்றுவிட்டோம்!

புத்தி தெளிந்தோம் — புரட்சிக் கருத்துக்களுக்கு முன்பாக மண்டியிடுகிறோம் - மன்னிப்பு வேண்டுகிறோம்!

கனம் மாஜிஸ்திரேட் அவர்களே! தவறிழைத்தவன் திருந்தி வாழ முடியாதா? முடியுமென்றால்—எங்களையும் 'திருத்தம் பெற்ற பதிப்பு'களாக ஏற்றுக் கொள்ளுங்கள்! திருவுள்ளம் காட்டுங்கள்!

'ஆண்டவன்' பெயரைச் சொல்லிக் கொண்டு அக்ரமம் இழைத்து, அறிவுலகத்தின் கேலிப் பார்வைக்கு ஆளான இந்த 'அபஜெயவாதி'களின் மீது நீங்கள் பொழியும் கருணை எங்களை நல்லவர்களாக்க பயன்படும்! நாச காரியங்களில் ஈடுபடாமல்-நாட்டில் உலவத் தக்க மனிதர்களின் பட்டியலிலே சேர்ந்து கொள்ளுகிறோம் எங்களை அருள் கூர்ந்து மன்னித்து விடுங்கள்!

கனம் நீதிபதி அவர்களே! கோர்ட்டாரே! நாங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்வதோடு மட்டுமல்ல — குன்றெடுக்கும் பெருந் தோளனும் ராவணன் பரம்பரையினரிடம் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக வருந்துகிறோம்—மன்னிப்பும் கேட்கிறோம். எங்களை விடுதலை செய்து விடுங்கள்.

கையிலே 'மூவர்ணக்கொடி' பிடிக்கும் நாங்கள் இனி எங்களை மறந்தும் மூர்க்கர்களின் ஆயுதமாம் கம்பையும், கட்டாரியையும் தொடமாட்டோம்; எங்கள் நிலை மறந்து வெறியாட்டம் நடத்தி விட்டோம்; வீண்பழியை சுமந்து கொண்டோம். ஏதுமறியாத பொது மக்களுக்கும், நேர்மையை விட்டு அணுவளவும் விலகாத அறிவியக்கத்தினருக்கும் அன்றைய தினம் தொல்லை கொடுத்து விட்டோம்; துரையவர்களே! எங்களை விடுதலை செய்து விடுங்கள்! இனியும் இத்தகைய வீண் வேலைகளில் இறங்க மாட்டோம்!

மதத்தையும் மார்க்கத்தையும் காப்பாற்றுவதாக நினைத்துக் கொண்டு 'மனித ஜாதிக்கு' இனிமேலும் களங்கத்தை உண்டாக்க மாட்டோம், கண்யமாக நடக்க கற்றுக் கொள்ளுவோம்.

இது தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக தரப்படும் உறுதி மொழிகள் அல்ல; உள்ளத்திலிருந்து வெளி வரும் உண்மையான வாசகங்கள்! வேண்டுமானால் 'ஞானோதயம்' என்றும் குறிப்பிடலாம்!

இன்று நாட்டிலே பொங்கி வரும் புதுவெள்ளத்திற்கு ஏற்ப நீந்தப் பழகிக் கொள்ளுகிறோம், எதிர் நீச்சல் போட்டு 'அவமானச் சின்னங்களாக' நீதிக்கு முன்னால் நிற்க மாட்டோம்; இந்த வாசகங்களே எங்கள் தவறான நடத்தைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற இறுதி சாசனம்!

இப்படிக்கு:
திருந்திய விபீஷணர்கள்.

"மதுரை 'ராமாயண வழக்கு' சம்மந்தமாக-36 எதிரிகளும் தங்கள் குற்றத்தை புணர்ந்து—வருத்தம் தெரிவித்து, மன்னிப்பு கோரியதால் மதுரை ஜில்லா ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் குற்றவாளிகளை விடுதலை செய்தார்."

—பத்திரிகைச் செய்தி.

ஆட்சியாளர்களுக்கு டாக்டர் மு. வரதராசனரின் அறிவுரை.

"'தமிழன் என்றோர் இனமுண்டு' என்று புகழ்பாடும் இந்த நாட்டில்தான்—தாய்மொழி பேசுவோர் அவமதிக்கப்படுவதைக் கண்டும் வாளாயிருக்கும் அவலநிலை இருக்கிறது. இது அடியோடு அகல வேண்டும்,

'மக்கள் சமுதாயத்தில் கடைசிப் படியில் இருப்பவர்களின் குரலைக் கேட்பதுதான் ஜனநாயகம்' என்று மேனாட்டு அறிஞன் ஒருவன் கூறுகின்றான்.

ஆட்சியாளர்கள் மக்களின் உரிமை உணர்ச்சியை மதித்து செயலாற்ற வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால்—அந்த ஆட்சியால் மக்களை ஒரு சில காலம் வரைதான் அடக்கி ஒடுக்க முடியும். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்ச்சி என்றாவது ஒருநாள் பிறிட்டு வெளிவரவே செய்யும். நல்ல உணர்ச்சியை தடுக்க முயற்சித்தால்—அது தீய வழியில் கிளர்ந்தெழ வழி செய்தவர்களாவோம்!

ஆகவே ஆளும் கட்சியினர் பொதுமக்களின் உணர்ச்சியை மதித்து, செய்யவேண்டிய உரிய கடமைகளை காலத்தில் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் நாடும், மொழியும் நிலைக்கும். அறிவுள்ள மக்கள் சாதியையும்—மதத்தையும் விட்டுவிட முடியும்—ஆனால் தாய் மொழியை மட்டும் எவராலும் மறக்க முடியாது.

தாய்மொழியில் ஆட்சி நடக்க வேண்டும் என்பதோ—நாடு பிரிக்கப்பட வேண்டும் என்பதோ—குறுகிய நோக்கமன்று, அது மக்களின் உணர்ச்சியை மதித்து நடக்கும் நல்வழியாகும்,"

★

13-12-55 ல் சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் டாக்டர் மு. வரதராசனார் எம். ஏ; எம். ஓ. எல். பிஎச்டி. அவர்கள் வெளியிட்ட கருத்து.

இரண்டு நாட்களில் மூன்று நாடகங்கள்

மு. கருணாநிதியின் புதிய நாடகம்

விழுப்புரம் ஜோதி தியேட்டரில்

24—12—55 சனி இரவு 10-30 மணிக்கும்,
25—12—55 ஞாயிறு 2 நாடகங்கள் மாலை 6-30 மணிக்கும்,
இரவு 10-30 மணிக்கும்

இலட்சிய நடிகர் **எஸ். எஸ். ராஜேந்திரன்**
நாடக மன்றத்தார் நடிக்கும்

மணிமகுடம்

கட்டணம்: ரூ. 2-8-0, 1-8-0, 0-12-0, 0-6-0.
பெண்கள் 0-4-0

பரிசு வேண்டாம்....

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டிருந்த கெய்சரின் மனைவி-நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிகளையும் பார்வையிட சுற்றுப்பயணம் தொடங்கினாள். அப்படி சுற்றுப்பயணம் செய்து கொண்டு வரும்போது ஒரு நாள் நம் தங்கை படித்துக் கொண்டிருந்த அந்தப் பள்ளிக்கு விஜயம் செய்தாள்.

சக்ரவர்த்தினி மாணவிகளிடம் சில கேள்விகளை ஜெர்மானிய மொழியில் கேட்டாள். பல மாணவிகள் கேள்விகளையே புரிந்து கொள்ள முடியாமல் திருதிருவென்று விழித்தபடி நின்றனர். இன்னும் சில மாணவிகளுக்கு ஜெர்மானிய மொழியை சரியாக உச்சரிக்கவே முடியவில்லை, கெய்சரினிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. தெரியாத வேற்று மொழியில் கேள்விகளைக் கேட்டு குழந்தைகளைக் கொடுமை செய்கிறாளே என்று ஆசிரியர்களுக்கு அதைவிட கோபம் பொங்கிற்று. சக்ரவர்த்தினியல்லவா—என்ன செய்ய முடியும்; பேசாமல் அவளுக்கு முன்பு கைகட்டி நின்றனர்.

அரசி கடைசியாக ஒரு மாணவியை அழைத்து சில கேள்விகள் கேட்டாள்.

கன்னத்தில் அறைவதுபோல படபடவென்று கேட்ட கேள்விகளுக்கு பதில் கூறினாள் அந்தச் சிறுமி

அரசி ஆச்சரியப் பட்டாள். அத்தனை சிறுமிகளுக்கிடையே தன் கேள்விகளுக்கு ஒரே ஒரு மாணவி சரியாக பதிலளித்து விட்டாளே என்று அரசிக்கு அடக்க முடியாத சந்தோஷம். அந்த சிறுமியை அருகில் அழைத்து அன்புடன் அணைத்துக்கொண்டு, 'சிறுமியே! நீ நன்றாகப் படிக்கிறாய்! அதனால் உனக்கு ஒரு பரிசு தரப்போகிறேன்; உனக்கு என்ன வேண்டும்? பயப்படாமல் கேள்' என்று அன்புடன் கூறினாள் அரசி.

'பரிசு வேண்டாம் அரசி; என் தாய் மொழியில் நான் படிக்க உரிமையளிக்க வேண்டும்; அதுவே எனக்கு சிறந்த பரிசு' என்று ரத்தனச் சுருக்கமாக அந்த சிறுமி கூறி முடித்தாள்.

இதைக் கேட்ட அரசி திடுக்கிட்டு ஒன்றும் பேசாமல் தலைநகருக்குத் திரும்பிவிட்டாள்.

அரசி சென்ற சில நாட்களில் 'ஆஸ்டிரிய மக்கள் தங்கள் தாய் மொழியில் கல்வி பயில உரிமையுடையவர்கள்' என்று கெய்சர் சக்ரவர்த்தி உத்தரவு பிறப்பித்தான்!

இழந்த உரிமையை மீண்டும் பெற்றதால் ஆஸ்டிரீய நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்தனர், அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை,

'பரிசு வேண்டாம்—என் உரிமையைக் கொடு' என்று அரசியிடம் கேட்டு ஒரு சர்க்காரின் கண்களையே திறந்துவிட்ட அந்த தங்கத் தங்கையின் புகழ் ஆஸ்டிரிய மண்ணிலே இன்றளவும் ஒளி வீசிக்கொண்டிருக்கிறதாம்!

★

மௌடீகபுரியின் காவலரே...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

தெல்லாம் அடிபணியாத—தலை வணங்காத திராவிடர் பண்பாடு—இந்த இந்துமத வெறியர்களின் பேராசைக்கு இனியுமா தலைவணங்கப்போகிறது!

இந்துமதத்தின் பேரால் 'கோட்சேக்களை' வளரவிடும் கோல்வால்கர் கூட்டத்தினர் எத்தகைய சமுதாய விரோதிகள் என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

கரைந்துவரும் 'இந்துமதம்' இனி காப்பாற்றப்பட முடியாத ஒன்று; செத்துப்போன பிணத்தை சவக்குழியில் மூடிவிட்டு வேண்டுமென்றால் இரண்டு துளி கண்ணீர் சிந்தட்டும்) அறிவு மார்க்கத்தைப் பின்பற்றுவதுதான் மதியுடையோர் செயல்! 'குட்டிகூரா' பவுடர் பூசுவதாலேயே குஷ்டரோகியின் தழும்புகளை மறைத்துவிட முடியாது, 'இந்து மதமும்' அந்த நிலையைத்தான் அடைந்துவிட்டது.

'மதபோதையால்' மதி மயங்கித் திரிகின்ற 'இந்துமத வெறியர்'களின் நிலை குறித்து—நம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதைத் தவிர நம்மால் வேறு என்ன செய்யமுடியும்?

★

நிதி அளிப்புக் கூட்டங்களில் மு. க.

வேலூர் (வ. ஆ.)

4—12—55 அன்று காலை 10 மணிக்கு நேஷனல் டாக்கீசில் மாவட்ட செயலாளர் தோழர் முல்லை சத்தி அவர்கள் தலைமையில் மாநில மாநாட்டு நிதி அளிப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ப. உ. சண்முகம், எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, மு. கருணாநிதி—ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 150 கருணாநிதியிடம் அளிக்கப்பட்டது.

காங்கேயநல்லூர் (வ. ஆ.)

10—12—55 மாலை 6 மணிக்கு, நடந்த கூட்டத்தில் கருணாநிதியிடம் ரூ. 61 மாநில மாநாட்டு நிதிக்காக அளிக்கப்பட்டது.

குடியாத்தம் (வ. ஆ.)

அன்றிரவு ராஜேந்திரன் நாடக மன்றத்தாரின் அறிஞர் அண்ணாவின் சந்திரமோகன் நாடகம் கருணாநிதி தலைமையில் நடைபெற்றபோது குடியாத்தம் தொழிலாளர் தோழர்களால் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ 7-12-6 கருணாநிதியிடம் அளிக்கப்பட்டது.

வாணியம்பாடி [வ. ஆ.]

11—12—55 அன்று மாலை 6 மணிக்கு தோழர் முல்லை வடிவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் மாநில மாநாட்டு நிதிக்காக வாணியம்பாடி தி. மு. க. சார்பில் ரூ. 150-ம் எக்லாஸ்புரம் தி. மு. க சார்பில் ரூ. 9-ம் கருணாநிதியிடம் அளிக்கப்பட்டது.

திருச்சி

18—12—55 காலை 9 மணிக்கு திருச்சி தேவர்மன்றத்தில் தோழர் அன்பில் தர்மலிங்கம் அவர்களின் தலைமையில் புயல் நிவாரண நிதியளிப்பு கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். எஸ். மணி, ஆர். நாகசுந்தரம், கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். செலவுப் போக ரூ. 500 புயல் நிவாரண நிதிக்காக அளிக்கப்பட்டது.

18-12-55 அன்று திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற புயல் நிவாரண நிதிக்கூட்டத்தில் சிலவு போக மீதி தொகையான ரூ 500 க்கு கைத்தறி வேட்டிகள் வாங்கப்பட்டு வேதாரண்யம் பகுதியில்புயலால் பாதிக்கப்பட்ட தோழர்களுக்கு கருணாநிதியால் வழங்கப்பட்டது.

வேதாரண்யம் பிர்க்காவில் உள்ள தேத்தாக்குடி ஆர். வி. சர்மா ஹையர் எலிமென்டரிபள்ளி நிர்வாகிகளால்கருணாநிதி வரவேற்கப்பட்டார். அப்பள்ளியின் தலைமையாசிரியர் தோழர் ராமசேஷன் அவர்கள் புயலால் இடிந்து போன பகுதிகளை சுட்டிக்காட்டி மாணவர்கள் படும் அல்லல்களையும் எடுத்துக்கூறினார். அங்குள்ள 200 மாணவர்களுக்கு கைத்தறி ஆடைகள் வழங்கப்பட்டன,

அங்குள்ள சேரிவாழ் தோழர்களுக்கும் ஆடைகள் வழங்கப்பட்டன.

பின்னர் தோப்புத்துறை சேரி, நடுத்திட்டு, குடியானவர் பகுதி வடபாதிபிச்சங்கோட்டம், கட்டிமேடு சேரிகள், ரொக்க குத்தகை பகுதியில் புயலின் கொடுமைக்கு ஆளான தோழர்களுக்கு கைத்தறி ஆடைகள் வழங்கப்பட்டன.

கஸ்தூரிபாய் கன்னியர் குருகுலம் நிர்வாகி தோழர் அப்பாக்குட்டி அவர்களும் அரசினர் ஆதார பயிற்சி பள்ளி மாணவர்களும் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கருணாநிதிக்கு சுட்டிக் காட்டினர்.

திருச்சி மாவட்ட தி மு க செயலாளர் தோழர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும், வ. ஆ. மா. தி. மு. க. செயலாளர் தோழர் முல்லை சத்தி அவர்களும், திருவாரூர் தென்னன் அவர்களும், இந்த சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டு உதவி புரிந்தனர்.

★

தென் பகுதி இரயில்வேமென் யூனியன் பொன்மலை

(பதிவு எண். 1647)

அறிவிப்பு

தென்பகுதி இரயில்வேமென் யூனியனின் (எஸ். ஆர். எம். யூ.) பொதுச் செயலாளர் என்று சொல்லிக் கொண்டு, ஏ. கே. சச்சிதானந்தம் என்ற ஒருவரின் பெயரில், தென்பகுதி இரயில்வேமென் யூனியன், பொதுச்சபை (ஜெனரல் பாடி) கூட்டம் 25—12—55 அன்று பொன்மலையில் கூடும் என ஒரு அறிக்கை ஒரு தின இதழில் வந்திருக்கிறது. தோழர் சச்சிதானந்தம் என்பவர், யூனியனிலிருந்து 5 ஆண்டுகளுக்கு விலக்கப் பட்டவர் என்பதும், அவர் எந்த பொறுப்பும் வகிக்கவில்லை என்பதும் யாவரும் அறிந்ததே. எனவே பொன்மலையில் கூட்டுவதாக அறிவிக்கப் பட்டுள்ள அந்த கூட்டம், யூனியனின் அதிகாரபூர்வமானது அல்ல என்பதோடு, அதன் நடவடிக்கைகள் யூனியனை கட்டுப் படுத்தாது என்று அறிவிப்பதோடு, இத்தகைய அறிக்கைகளைக் கண்டு ஏமாறுமல் இருக்கும்படி, ரயில்வே தொழிலாளர்களையும், குறிப்பாக யூனியன் அங்கத்தினர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

சி. இராகவானந்தம்,
தலைவர்.

பொன். பரமசிவம்,
கூட்டுப் போதுச் செயலாளர்.

பிறை வானம்

பிள்ளைகள் பகுதி

கொந்தளிப்பு!

[சிறுகதை]

கடலின் உறுமலையும், உலகையும் மறந்து அந்த இரண்டு தம்பிகளும் அந்த கடற்கரையில் ஏதோ ஆனந்தமாய் பேசிக் கொண்டிருந்தார்கள். அதில் ஒரு தம்பி பகட்டான உடையுடனும், உடலுடனும் வீற்றிருந்தான். மற்றொரு தம்பியோ அந்தத் தம்பிக்கு எதிராக இடுப்பிலே ஒரு முழ கந்தையுடன் வீற்றிருந்தான்.

அந்த இரு தம்பிகளுக்குள் தான்எவ்வளவு வித்தியாசங்கள் ஆனால் உடலிலும், உடையிலும் உள்ளவித்தியாசங்கள் உள்ளத்தில் சிறிதும் இல்லை. அவர்கள் உட்கார்ந்து புன்முறுவலுடன் பேசிக் கொள்வது அந்த இரு தம்பிகளும் நட்பின் சிகரத்தையே தொட்டுவிட்டதைப் போல் காட்சி தந்தது.

நட்புஎன்ன 'எவரெஸ்ட்டா' கஷ்டப்பட்டு தொடுவதற்கு? நட்பு எவரெஸ்ட் அல்ல! எவரெஸ்ட் உறுதியுள்ள மனிதர்கள் சிறிது கஷ்டப் பட்டால் தொட்டு விடலாம். தகர்த்தும் விடலாம். ஆனால் அந்த உறுதி வாய்ந்த நட்பு சிகரத்தை ஒரு சிலரால்தான் தொடமுடியும், தொட்டுவிட்டால் அதைத் தகர்க்க யாராலும் முடியாது. அந்த அழிக்க முடியாத சிகரத்தைத்தான் அவர்கள் தொட்டுவிட்டு உணர்ச்சியோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்த பகட்டான உடையுடன் உட்கார்ந்திருக்கும் பாலு, அந்த ஏழைத் தம்பியின் நட்புக்குப் பாத்திரமானதால் நட்புக் கோட்டையை தகர்த்தெறிய அவன் தந்தையிடமிருந்துபெற்றஏசல் 'சம்மட்டி' அடிகள் ஏராளம். ஆனால் அந்த ஏழைத் தம்பியின் அன்பாலும், இனிய பேச்சுகளாலும் எழுப்பப்பட்ட அந்த கோட்டை சிறிதும் தகர்ந்த பாடில்லை. அன்றும் அதேபோல்தான் தன் தந்தையின் கோபத்தையும் மறந்து, அந்த பணக்காரத் தம்பி பாலு அந்த செம்படவச் சிறுவன் வேலனுடன் பேசிக் கொண்டிருந்தான்.

திடீரென்று காற்றின் வேகம் அதிகரித்தது. கடல் தன் அலைக் கரங்களை வேகமாக நீட்டியது. அப்பப்பா! என்ன பயங்கரம்! கொந்தளிக்கும் கடல் தன் கோரப் பசிக்கு அந்த இரு நண்பர்களையும் விழுங்கிட்டது. அதோடு அதன் கோரப் பசி தீர்ந்த பாடில்லை. அருகிலிருந்த செம்படவக் குடிசைகளை நோக்கிப் படையெடுத்தது. அங்கிருந்த செம்படவர்கள் தங்கள் மனைவி மக்களை அழைத்துக் கொண்டு ஓடினார்கள். அந்தக் கூட்டத்திலே ஒரு செம்படவப் பெரியவர் 'வேலா! வேலா!' என்று தன் ஒரே மகனை கூப்பிட்டவாறு எங்கோ ஓடினார். அங்கே ஒரு மாளிகையின் வாசலிலே ஏனோ தயக்கத்துடன் நின்றார்.

காற்றின் வேகத்தால் அந்த மாளிகையின் வாசலில் தொங்கிய "பால பவனம்" என்ற பலகை இங்கும் அங்கும் ஆடியது. உள்ளிருந்து ஒரு பெரியவர் 'பாலு! பாலு!' என்று சப்தமிட்டவாறு வெளியே வந்தார். அவர் தன் மகன் பாலுவைக் காணவில்லையே என்று துடித்தார். துவண்டார். அங்கும் இங்குமாக ஓடினார். அப்போது அங்கிருந்த செம்படவரைக் கண்டதும் அவர் கோபம் கொண்டார்

அந்த செம்படவச் சிறுவனால் தான் தன் மகன் காணாமல் போனான் என்ற எண்ணம் எழும்ப வேலனின் அப்பாவை நோக்கி, எங்கேடா வந்தாய்! என்ற கூக்குரலோடு உதைத்து வெளியேதள்ளினார். அந்த செம்படவரும் எங்கோ நடந்தார். கோரக் கடலின் கோபம் இன்னும் தணிந்தபாடில்லை; செம்படவச் சேரியை சீர்குலைத்தது. பிறகு மாளிகையையும் நோக்கி படையெடுத்தது. மாளிகை வாசிகளும் வேறிடம் நோக்கி விரைந்தனர். 'பால பவன'த்தின் சொந்தக்காரர்களும் தங்கள் மாளிகையைப் பிரிந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினர் வேறிடத்திற்கு. அங்கே ஒரு மூலையில் அந்த ஏழைச் செம்படவரும் உட்கார்ந்திருந்தார். அந்தப் பணக்காரரைக் கண்ட அவர் எழுந்து மரியாதை செலுத்தி ஒரு ஓரமாய் நின்றார். அப்போதுதான் அந்த தனவந்தருக்குத்தன் அருமை சிறு மகனை மாளிகையிலேயே விட்டு விட்டு வந்தது ஞாபகம் வந்தது. அவர் பதைபதைத்தார்.

'அய்யோ! மகனே!' என்று சப்தமிட்டார். ஆனால் மகனைக் கொண்டுவரதான் செல்லுவதற்குத்தான் துணிவுவரவில்லை.

புயலின் வேகமும் அதிகரித்தது பெரியவர் எதுவும் அறியாத நிலையில் நின்றார். புயலின் வேகம் சிறிது சிறிதாக குறைந்தது அப்போது அந்த பெரியவரின் பார்வைக்கு ஒரு நொண்டியான ஆள் ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு அவரை நோக்கிவருவது தெரிந்தது சந்தேகமேஇல்லை அந்த ஆளின் கையில் இருப்பது அவரது இளைய மகன்தான். காலிலே இரத்தம் ஒழுக, நொண்டி நொண்டித் தூக்கிக் கொண்டு வருவது அந்த செம்படவர் தான். பெரியவரிடம் அந்த குழந்தையை கொடுத்துவிட்டு ஒரு ஓரமாய் ஒதுங்கி நின்றார், அந்த செம்படவர். புயலும் ஓய்ந்தது அமைதி நிலவியது. குழந்தையைக்கையில் வாங்கிய பெரியவர் ஒன்றும் புரியாது சிலையாய் நின்றார். அவர் சுய உணர்வு பெற்று செம்படவரிடம் மன்னிப்பு கேட்க நிமிர்ந்த போது, அந்த செம்படவர் நொண்டிக் கொண்டே வெகு தூரத்தில் போய்க் கொண்டிருந்தார்.

அப்போது அந்த பெரியவரின் கண்களிலிருந்து இரண்டு கண்ணீர்த் துளிகள் கீழே ஓடும் மழை நீரில் சிந்தி ஓடியது. மழை நீரில் சிந்தினாலும் அந்த கண்ணீர்த் துளிகளில் எவ்வளவோ அர்த்தங்கள் புதைந்திருந்தன!

—செல்வம்

'பரிசு வேண்டாம்; உரிமை கொடு!'

எத்தனையோ பெரிய மனிதர்களுக்கு தோன்றாத புத்தம் புதிய கருத்துக்களெல்லாம் சில சமயங்களில் அரும்பு நெஞ்சம் கொண்ட சிறுவர் – சிறுமிகளிடம் உதயமாகின்றன.

'இந்தப் பசலையா இப்படி சொல்லிற்று!' என்று மூக்கின் மேல் விரல் வைத்து பெரியவர்களை யெல்லாம் பிரமிக்கும்படி செய்துவிட்ட ஆஸ்டிரிய நாட்டு தங்கத் தங்கையின் கதைபொன்று கீழேவருகிறது. தொடருங்கள்:

அப்பொழுது ஆஸ்டிரியா நாடு ஜெர்மன் நாட்டிடம் அடிமைப் பட்டுக் கிடந்தது. அடிமை நாடான ஆஸ்டிரியா நாட்டிற்கு ஜெர்மன் அரசாங்கம் தந்த தண்டனைகள் ஏராளம். உரிமைகளை யெல்லாம் பறி கொடுத்த ஆஸ்டிரியர்களிடம் ஜெர்மானிய சர்க்கார் நாளுக்கொரு புதிய சட்டங்களைப் போட்டுக் கொண்டிருந்தனர். அப்பப்பா! அவர்கள் பட்ட துன்பங்கள் அளவிட முடியாது; ஆஸ்டிரிய மண்ணை அடிமை படுத்தியதும் அல்லாமல், ஜெர்மானியர்கள் அந்நாட்டு மொழிப் பிரச்சினையிலும் தலையிடலாயினர்.

ஆஸ்டிரிய நாட்டு மக்கள் அனைவரும் ஜெர்மன்மொழியை கட்டாயமாகப் படித்தாக வேண்டும் என்று சட்டம் கொண்டுவந்தனர். அந்தோ! அந்த அளவோடு ஜெர்மானியர்களின் கொடுங்கோன்மை நிற்கவில்லை. ஆஸ்டிரிய நாட்டு மக்கள் தங்கள் தாய்மொழியை படிக்கவும் – எழுதவும் கூடாது என்று கடுமையான உத்திரவுகளைப் பிறப்பித்தனர்.

இந்த பயங்கரக் கொடுமை தாங்காத சிலர், இரவு நேரங்களில் அரசாங்கத்தாருக்குத் தெரியாமல் தாய் மொழியைப் படித்துக்கொண்டு வந்தனர்.

ஆஸ்டிரிய நாட்டுப் பள்ளிகளிலும் ஜெர்மானியமொழி கட்டாய பாடமாக்கப் பட்டது. தாய் மொழியில் சிறுவர்-சிறுமிகளுக்கு பாடம் போதிக்கக் கூடாது என்று ஆசிரியர்களுக்கு கடுமையான உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டன. அரசாங்க உத்திரவுக்குப் பயந்து தங்கள் வாயில் உச்சரிக்கவும் முடியாத வேற்று மொழியை குழந்தைகள் கஷ்டப்பட்டு படித்தனர். தாயகத்தின் அடிமைத் தளை அறுத்தெறியப் படுகின்ற வரை இந்தக் கொடுமைகளுக்கு ஒரு முடிவு ஏற்படாது. என்று ஏங்கி கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தவர்கள் ஏராளம்.

மொழி உரிமையை இழந்து போய் — வேற்று மொழியை பலாத்காரமாக சின்னஞ் சிறுவர்களிடையே பரப்புகின்ற நிலைக்கு கட்டுப்பட்ட ஒரு பள்ளியில்தான் நாம் சந்திக்கின்ற இந்தத் தங்கையும் படித்துக் கொண்டிருந்தாள்!

எங்கள் தாய் மொழியைத் தடை செய்துவிட்டு — எங்களால் உச்சரிக்கவும் முடியாத ஜெர்மானிய மொழியை ஏன் திணிக்கிறீர்கள்? என்று கேட்கவும் அஞ்சி—ஆமை போல் அந் நாட்டு மக்கள் அடங்கிக் கிடந்தனர்.

ஒரு நாள் ஜெர்மன் நாட்டு அரசி—அப்பொழுது ஆண்டு

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

‘எழுத்தாணி’

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) எஸ். எஸ். மணி,
நெ. 6, வடக்கு ராணி தெரு,
திருச்சி

தி. க. கமலக்கண்ணன்; பார்க்டவுன்.

(?) அசோகருக்கும், நேருவுக்கும் என்ன வித்யாசம்?

அசோகர் தன் மகள் யசோதையை புத்தமத கொள்கைகளைப் பரப்ப இலங்கைக்கு அனுப்பினார்; நேருவோ இந்திராவை அருகிலேயே வைத்திருக்கிறார்!

(?) இந்தியாவில் பெண்ணாசையற்ற சாமியார்கள் இருக்கும்போது ஜனத் தொகை அதிகரிப்பதேன்?

சாமியார்கள் பெண்ணாசை அற்றவர்களென்று யார் சொன்னது?

நா. ராமசாமி; கம்பம்.

(?) எண்ணத்தின் எதிரொலி எது?

செயல்!

(?) மனிதன் என்றால் என்ன?

பேசவும், சிரிக்கவும் தெரிந்த ஒரு விசித்திரப் பிராணி!

(?) வருண பகவான்; வாயு பகவான்; கங்கா தேவி—இந்த மூவரும் மக்களுக்குச் செய்த கடமை எது?

வேதாரண்யங்கள் தான்!

டி. அப்பாராவ்; திருவண்ணாமலை.

(?) ஆண்டவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?

அய்யையோ! அவர் ‘தேவரா’யிற்றே!

க. அரங்கநாதன்; திருச்சி.

(?) காதலியின் இதழோரப் புன்னகை எந்த ரகசியத்தை ஏந்தியிருக்கிறது?

அந்தப் புன்னகையின் ரகசியம் பொன்னகையாக இருக்கலாம்!

வளவன்; பழூர்.

(?) பஜனை பாடிய சம்பந்தருக்கு, பஞ்சம் வந்தபோது படிக்காசு கொடுத்த பரமன் புயலுக்கு நிவாரண நிதி கொடுப்பாரா?

அவர் தருவாரா? அவருக்குப் பதில் சினிமாவில் பரமன் வேஷம் போட்ட நடிகர்கள் வேண்டுமானால் கொடுக்கலாம்!

இரா. கோதண்டராமன்; சென்னை-30.

(?) தமிழகம் கடந்த மாதம் யார் முகத்தில் விழித்தது?

நவம்பர் முதல் வாரம் ராஜேந்திரப் பிரசாதான் இங்கு வந்து போனார்!

(●) எஸ். எஸ். மணி; திருச்சி.

(?) காமராசர் சிவாஜி என்றால் நேரு யார்?

அடிக்கடி படையெடுக்கும் அவுரங்கசீப்பாயிருக்கலாம்! (தயவு செய்து முழு வரலாற்றுக் கதையையும் ஒப்பிட்டு விடாதீர்கள்)

நா. உ. நாதன்; ஆரணி.

(?) கடவுள் உன் முன் காட்சியளித்தால் நீர் என்ன வரம் கேட்பீர்?

நீர் இருக்கிறீர் என்பதை நிலைநாட்ட ஏதாவது ஒரு வழி சொல்ல மாட்டீரா?—என்று தான் கேட்பேன்!

(?) இந்திய நாட்டின் இருட்டறையாக எதைக் கூறலாம்?

கோவில்களிலே உள்ள கருப்பக் கிரகத்தைக் கூறலாம்!

பேசும் கடிதம்....

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

சங்கர் இத்தகைய இழிக்குணம் படைத்தவர் என்று எனக்குத் தெரியாது. யாரும் நம்பக்கூட மாட்டார்கள். அவ்வளவு பெருந்தன்மையுடன் பழகுபவர். படித்தவர், பட்டம் பெற்றவர். பட்டுப்போன ஒரு சிட்டின் வாழ்வை சிதைத்து விட்டார் என்பதை அறிந்து என் உள்ளம் கொந்தளித்தது. கோபத்தின் உச்சியை நான் அடைந்தேன். வார்த்தைகளை வீசி விட்டு வீடு திரும்பிய எனக்கு அமைதி கிடைக்கவில்லை. கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த தாராவின் உருவம் என் கண்களிலே சதிராடின. அந்த சோகப் பதுமையின் துயரை துடைக்க என் மனம் விரும்பியது. தங்க மேனியாளின் பங்கத்தை போக்க முடிவு செய்தேன். எப்படியும் அந்த சிலையை சங்கருக்கு உரிமையாக்கி விடுவது என்று தீர்மானித்தேன். அந்த நேரத்திலே சங்கர் வந்தார். அவரின் விழிகள் நீரை சொரிந்து கொண்டிருந்தன. சங்கர்! இங்கு என்ன வேலை. பசுத்தோலைப் போர்த்திக் கொண்டிருக்கும் புலிக்கு இங்கு இடம் இல்லை. போய் விடு! பேய் குணம் படைத்தவனே போய்விடு! என்று எரிந்து விழுந்தேன். வார்த்தைகளை பொழிந்து தள்ளினேன். அவர் பொறுமையோடு ராதா! என்னை மன்னித்து விடு! இக்கடிதத்தைப் படித்துப்பார்! என்று கடிதத்தை தந்தார். அதைப் பிரித்தேன்!

பேசும் கடிதம் :—

விஷக் கோப்பையின் விளிம்பிலே என் உதடுகளை பதிய வைத்துக் கொண்டு இதை எழுதுகிறேன். மரணவாயிலின் கதவுகளை தட்டிக்கொண்டு இதை தீட்டுகிறேன். பட்டுப்போன என் வாழ்வு சங்கரால் துளிர்க்கும் என்று நம்பி கெட்டுப் போனேன். சமதாயத்தின் கேடுகளை பிறருக்கு எடுத்துரைக்கும் அவர் தன் வரையில் சமுதாயத்தை எதிர்க்க துணியவில்லை. தன் கௌவுரவத்திற்கு களங்கம் ஏற்படக் கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்தார். ஒரு பெண் களங்கத்தோடு இவ்வையகத்தில் வாழ முடியாது என்பதை அவர் உணரவில்லை.

சங்கர் கல்லூரியின் பேராசிரியர் ஆனால் இந்த சரிக்கும் முல்லையின் வாழ்வை சிதைத்து விட்டார். மக்களின் வாழ்வின் ஒளி விளக்காக பணிபுரிபவர் என் வாழ்வு ஜோதியை அணைத்து விட்டார்.

சிறிய வயதில் என் பெற்றோரால் வஞ்சிக்கப்பட்டேன். இன்று சங்கரால் ஏமாற்றப்பட்டேன்.

ராதா! ஏழைகளின் துயரைத் துடைக்கும் ஏந்திழை. இரக்க சிந்தை கொண்டவள் என்றெல்லாம் புகழப்பட்டவள்தான. மரணத்தின் வாயிலிருந்து பலரை மீட்டிருக்கிறாள். ஆனால் என் சோகத்தைத் துடைக்க அந்த துடியிடையாளுக்கு மனம் வரவில்லை தன் காதல் அலட்சியப்படுத்தப் பட்டதற்காக என்னைப் பழி வாங்கிக் கொண்டாள். அவள் விரும்பியிருந்தால் என் மானத்தைக் காப்பாற்றி யிருக்கலாம். களங்கத்தைத் துடைத்திருக்கலாம். அவளின் இதய பசிக்கு என்னை இரையாக்கிக் கொண்டாள். பரவாயில்லை. நான் போகிறேன், என் களங்கத்தின் கதிர்கள் உதயமாவதற்குள் மரணத்தின் மடியிலே நான் புதைந்து கொள்வேன்.

சாவை அணைக்கப் போகும் நான் உங்களுக்கு என் இதயத்தின் ஆசையையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் இருவரும் மணம் புரிந்துக் கொள்ளுங்கள். என்னுடைய பிரிவு உங்களை ஒன்று சேர்த்துவைக்கட்டும், என்னுடை சாவிலே உங்கள் வாழ்வு மலரட்டும், தேன் சிந்தட்டும்!

★

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை

கிடைக்கும்

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, ‘முரசொலி’ அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.